Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 தை 27 செவ்வாய்க்கிழமை (10.02.2015) பக்கங்கள் 20 ஓசை – 133

# வடபகுதிக்கு விசேட பாதுகாப்பு அவசியம் இல்லை



## காணிகள் மீளளிப்பே இன்றைய தேவை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விசேட பாதுகாப்பிற்கோ, முகாம்களுக்கோ தற்போது அவசியமில்லை. நாட்டில் ஏனைய பகுதிகளில் இராணுவப் பிரசன்னம் எந்த அடிப்படையில் உள்ளதோ அதே நிலைப்பாடே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கும் தேவை என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தி உள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்துள்ள செயலாளர் நாயகம் கடந்த கால யுத்தம் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொதுமக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகள் சில பாதுகாப்புத் தேவைகளுக்கென கைப்பற்றப்பட்டன.

2009 ஆம் வருடம் மே மாதம் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் அப்போதைய அரசுடன் நான் தொடர்ந்து மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் பயனாக கணிசமானளவு விவசாய மற்றும் வதிவிடக் காணிகளும் பொது மற்றும் தனியார் கட்டடங்களும் படிப்படியாக விடுவிக்கப்பட்டு உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன.

இந் நிலையில், எமது மக்களின் தலைவர்கள் எனத் தம்மை இனங்காட்டிக் கொள்ளும் நபர்

(19) பக்கம் பார்க்க...

## படையினருக்கு அவசியமற்ற காணிகள் விபரம் திரட்டப்படுகிறது வலி.வடக்கில்

வலி. வடக்கில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகளின் ஒரு பகுதியை முதல்கட்டமாக இந்த வாரத்துக்குள் விடுவிப்பதற்கு கொழும்பு அரசு கொள்கையளவில் முடிவெடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப்பட்டு முதலில் சில ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை விடுவிப்பதற்குத தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 15 ஆம் திகதி இந்தியாவிற்கு முதல் உத்தியோகபூர்வ பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்பாக விடுவிக்கப்படும் காணிகள் குறித்த அறிவிப்புக்கள் வெளியாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் எந்தப் பகுதிகளை முதலில் விடுவிப்பது என்ற விடயங்கள் ஆராயப்பட்டு வருகின்றன. முதல் கட்டமாக 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை விடுவிப்பதற்கான சாத்தியங்கள் குறித்து ஆராயப்பட்டு

(19) பக்கம் பார்க்க...

## படை முகாம்களை அகற்றாமல் காணிப்பிரச்சினைக்குத் தீர்வு

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



வட பகுதியில் காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முகாமகளை அகற்ற வேண்டிய தேவை இல்லை என பாதுகாப்பு இராஜங்க அமைச்சர் ருவன் விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

வவுனியாவிற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்திருந்திருந்த அமைச்சர் வன்னி பாதுகாப்பு தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வில் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

காணிப்பிரச்சினைக்கு தீர்வாக முகாம்களை நீக்க வேண்டிய அவசியம் இல்லை. அதற்கான தீர்வுகளை எம்மால் அடையாளம் காணமுடியும். இதற்காக குழுவொன்றை நியமித்து

(19) பக்கம் பார்க்க...

## காணாமற் போனோரின் உறவுகள் யாழ்.நகரில் நேற்று ஆர்ப்பாட்டம்



காணாமற் போனோர்களின் உறவினர்கள் யாழில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். மத்திய பஸ் நிலையத்தின் முன்பாக நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டமானது, யாழ். ஆஸ்பத்திரி வீதி வழியாக ஏ-9 வீதியை வந்தடைந்து, யாழ். மாவட்டச் செயலகம் முன்பாக காணாமற்போனோரின் உறவினர்கள் தமது உறவுகளைக் கண்டு பிடித்து தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

(19) பக்கம் பார்க்க...

## வாழ்வாதார உதவிப் பொருட்கள் பிரதேச செயலகத்தில் உறக்கம்

### பயனாளிகள் விசனம்

(காரைநகர்)

வருமானம் குறைந்த மக்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்புக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட உதவிப் பொருட்கள் உரிய பயனாளிகளுக்கு வழங்கப்படாமல் காரைநகர் பிரதேச செயலகத்தில் மாதக் கணக்கில் தேங்கிக் கிடக்கிறது.

காரைநகரில் கடந்த 2014 ஆம் ஆண்டு வாழ்வாதார வசதி குறைந்த மக்களுக்காக வாழ்வாதாரப் பொருட்கள் வழங்கத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான சைக்கிள்கள், மீன் பிடிவலைகள் மற்றும் தையல் இயந்திரங்கள் வழங்கப்படாமல் அப்பொருட்களினை காரைநகர்

(19) பக்கம் பார்க்க...

## குற்றச்சாட்டுக்களை மறுக்கிறார் மகிந்த



புதிய அரசாங்கம் தன்மீது சுமத்திவரும் குற்றச்சாட்டுக்களை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முற்றாக நிராகரித்துள்ளார்.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள அவர், தன் பக்க நியாயங்களை எடுத்துகூறி புதிய அரசாங்கம் சுமத்தும் குற்றச்சாட்டுக்களுக்கு மறுப்பு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

மக்கள் மத்தியில் எனக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் நாளுக்கு நாள் அரசாங்கம் என் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றது. அதி சொகுசு விமானம் ஒன்றை கொள்வனவு செய்து பயன்படுத்த திட்டமிட்டிருந்ததாக சுமத்தப்படும் குற்றச்சாட்டில் உண்மையில்லை. விமான நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட விமானத்தில் சில ஆசனங்களை அகற்றி முக்கிய பிரபு

(19) பக்கம் பார்க்த...

## ஆர்ப்பாட்டத்துக்கு முகங்கொடுக்க மாவை எம்.பி. தயங்கியது ஏன்?

(யாழ்ப்பாணம்)

காணாமற் போனவர்களின் உறவினர்கள் மேற்கொண்ட கவனயீர்ப்பு ஊர்வலத்தைக் கண்டு கொள்ளாது தனது சொகுசு வாகனத்தில் பத்திரிகை படித்துக் கொண்டு சென்ற மாவை சேனாதிராசாவை ஊர்வலத்தில் சென்ற காணாமற் போனவர்களின் உறவுகள் திட்டித் தீர்த்தனர்.

நேற்றுக்காலை யாழ்.நகரில் இருந்து யாழ்.செயலகம் நோக்கி காணாமற் போனவர்களின் உறவுகள் கண்ணீர் மல்க தமது உறவுகளை மீட்டுத் தரக்கோரி கவனயீர்ப்பு ஊர்வலமாக யாழ். புகையிரத நிலைய வீதிச் சந்தியில் வந்தபோது, தனது அலுவலகத்திலிருந்து சொகுசு வாகனத்தில் பத்திரிகை படித்தவாறு மாவை சேனாதிராசா அந்தச் சந்திக்கு வந்தபோதும் அந்த

(19) பக்கம் பார்க்க...

## வடக்கு அதிவேக சாலை நிதி ஒதுக்கீட்டில் குறைப்பு

### நிதியமைச்சர் தகவல்

வடக்கு அதிவேக நெடுஞ்சாலை சீர்திருத்தம் மற்றும் புனரமைப்புக்காக ஒதுக்கப்பட்ட நிதி தற்போது 60 பில்லியனால் குறைக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நிபுணத்துவ சங்கங்களின் அங்கத்தவர்களுடன் இடம்பெற்ற கூட்டத்தொடரில் கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(19) பக்கம் பார்க்க...

# தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் வகுப்பறைக் கண்ணாடிகள் உடைப்பு

### - ஆட்டோவும் சேதம் -

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கு சொந்தமான ஆட்டோ மற்றும் வகுப்பறை, கணனி அறைக் கண்ணாடிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இனந்தெரியாதவர்களினால் உடைக்கப்பட்டுள்ளது.

குறித்த கல்லூரியில் விடுமுறை நாட்களில் பகல் வேளையில் காவலாளி இல்லை. இரவிலேயே காவலாளி உள்ளார். இந்த நிலையில் நேற்று முன்தினம் பகல் 11.00 மணிவரை மாணவர்களுக்கான பிரத்தியே வகுப்புகள் நடைபெற்றன. இதற்குப் பின்னர் பி.ப. 1.30 மணியளவிலேயே இந்தக் கண்ணாடிகள் உடைப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெல்லிப்பளைப் பொலிஸ் நிலையத்தில் பாடசாலை அதிபர் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை இந்தச் சம்பவங்களை அடுத்து கல்லூரிக்கு விடுமுறை நாட்களில் பகல் வேளைகளிலும் காவலாளியை நியமிக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (17)

# ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய நிர்வாக சபை தெரிவு

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச செயலக பிரிவின் பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் நடப்பாண்டுக்கான நிர்வாக சபை உத்தியோகத்தர் தெரிவு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது., ம.சுப்பிரமணியம் இதற்கு தலைமை தாங்கினார்.

இதன்போது நடப்பாண்டுக்கான தலைவராக மீண்டும் ம.சுப்பிரமணியம் தெரிவானார். செயலாளராக செ.சந்திரசேகரமும், பொருளாளராக ச.விஜயரட்ணமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

உபதலைவராக க.கணேசவேலும், உபசெயலாளராக சு.சுந்தரேசனும், நிர்வாக சபை உறுப்பினர்களாக கா.தில்லையம்பலம், த.கந்தையா ஆகியோர் தெரிவாகினர்.

பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக பிரதேச செயலக கணக்காளர் என்.எஸ்.ஆர்.சிவரூபன் கலந்து சிறப்பித்தார்.

யாழ். மாவட்ட ஓய்வூதியர் சங்கத் தலைவர் வீ.சிறிசக்திவேல், செயலாளர் கே.கதிரமலை ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அத்துடன் சனச வங்கியின் பிரதிநிதியும் கலந்துகொண்டு ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படும் கடன் வசதி பற்றி விளக்கமளித்து உரையாற்றினார். (137)

# முதியோர் இல்லத்தில் வாழ்பவர்களுடன் பிறந்தநாளைக் கொண்டாடிய மூதாட்டி

(திருநெல்வேலி)

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கிவாழும் முதியவர்களுடன் இணைந்து தனது பிறந்த நாளை கொண்டாட வேண்டுமென விரும்பிய முதிய பெண்மணி ஒருவர் முதியோர் இல்லத்திற்கு வந்து கேக் வெட்டி தனது பிறந்த தினத்தை கொண்டாடி மகிழ்ந்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தனது மகள் மற்றும் உறவினர்களுடன் இல்லத்திற்கு வந்த இளவாலையைச் சேர்ந்த தங்கவடிவேல் நாகம்மா என்னும் 80 வயது மூதாட்டி கைதடி முதியோர் இல்லத்தில் உள்ள முதியவர்களுடன் சேர்ந்து தனது பிறந்தநாளைக் கொண்டாடி மகிழ்ந்தார்.

முதிய பெண்மணியின் 80 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடுவதற்கு அவரது மகள் மற்றும் உறவினர்கள் விரும்பிய போது கைதடி அரச முதியோர் இல்ல முதியவர்களுடனேயே தனது பிறந்தநாளைக் கொண்டாட விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

அவரது விருப்பத்திற்கேற்ப நேற்று முன்தினம் இல்லத்திற்கு அழைத்து வரப்பட்ட இம் முதிய பெண்மணி அங்கிருந்த முதியவர்களுடன் இணைந்து தனது பிறந்தநாளை மிகவும் மனமகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் கொண்டாடினார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணிக்கு வந்த இவர்கள் மாலை 5.00 மணிவரை அங்கிருந்த முதியவர்களுடன் தேநீர், சிற்றுண்டி அருந்தி ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

இல்லத்தைச் சேர்ந்த சுமார் நூறு பேருடன் உறவினர்களும் சேர்ந்து இப்பிறந்தநாளை கொண்டாடினர். இல்ல அத்தியட்சகர், உத்தியோகத்தர்கள், பணியாளர்களும் இணைந்து கொண்டனர்.

பிறந்தநாளை கொண்டாடிய தங்கவடிவேல் நாகம்மாவுக்கு அனைவரும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர். (137)

## நியமனம்

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளராக விஜிந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் மாவட்டத்தின் பனை தென்னை வள அபிவிருத்தி சார்ந்த திட்டங்கள் மற்றும் இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்பு போன்ற செயற்றிட்டங்களுக்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (67)

# அல் ஹதீஜா முன்பள்ளி கால்கோள் விழா



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அல் ஹதீஜா பாலர் பாடசாலையின் கால்கோள் விழா கடந்த வாரம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விசேட அதிதியாக முஹம்மதியா மஸ்ஜிஸ் (புதிய பள்ளி) மௌலவி மஹ்மூத் கலந்துகொண்டார். அங்கு அவர் உரையாற்றும் போது,

வீட்டுச் சூழலிலிருந்து வெளிவந்து பாலர் கல்விக்கழகத்தில் கல்வி பயில வரும் பாலர்கள் விளையாட்டுடன்கூடிய கல்வியை விரும்புகின்றனர். கல்விக்கான ஆரம்ப தளம் பாலர் பாடசாலையாகும். குறிப்பிட்ட நேரமளவில் தான் பாலர் பாடசாலையில் ஆசிரியைகளின் கண்காணிப்பில் கல்வி பயில்கின்றனர்.

கூடியளவு நேரம் பெற்றோருடன் காணப்படுவதனால் பெற்றோர்கள் பாலர்களின் விடயத்தில் கூடிய கவனம் எடுத்தல் அவசியமாகும். கல்வி கற்பது இன்றைய கட்டாய தேவையாகும் எனவும் கூறினார்.

இவ் ஆரம்ப வைபவத்தில் பெற்றோர்களும் புதிய மாணவர்களுடன் கலந்துகொண்டனர். (105)

# தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

தூக்கில் தொங்கிய நிலையில் கைதடியில் மீட்கப்பட்ட இளைஞனின் சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கைதடி தென்கிழக்கைச் சேர்ந்த முத்துலிங்கம் பிரசாந் (வயது - 21) என்ற இளைஞனே தனது வீட்டுக்கருகிலுள்ள வெற்றுக் காணியில் நின்ற மாமரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 5.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் நேற்று மரண விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். (இ)

# சமுர்த்தி முத்திரை மீளாய்வு

(யாழ்ப்பாணம்)

கல்வயல் ஜே/305 கிராம சமுர்த்தி பயனாளிகளின் சமுர்த்தி முத்திரை மீளாய்வு வரும் வியாழக்கிழமை இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 9.30 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை இம்மீளாய்வு, கல்வயல் சமுர்த்தி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

சமுர்த்திப் பயன்பெறும் பயனாளிகள் தமது குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை, சமுர்த்தி வங்கி கணக்கு புத்தகம் என்பவற்றை தவறாது கொண்டுவருமாறும் இதில் குடும்பத் தலைவரோ, தலைவியோ தவறாது சமுகமளிக்க வேண்டும் எனறும் கல்வயல் கிராம சமுர்த்தி உத்தியோகத்தர் சி.சிவகணநாதன் அறிவித்துள்ளார். (இ)


## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | செவ்வாய்க்கிழமை |
| --- | --- |
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப்பாடல்கள்) |
| Am 07.00 | காலைக்கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time (Live) |
| Am 09.58 | காலை செய்திகள் |
| Am 10.00 | Hello DD |
| Am 10.30 | தெரிந்தால் சொல்லுங்கள் |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | அதிர்வுகள் |
| PM 12.30 | அதிர்வுகள் |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |



## பார்வையற்ற, பார்வைக் குறைபாடுடைய மாணவர்களுக்கான வாழ்வக அனுமதி - 2015

2015 ஆம் ஆண்டுக்கான பார்வையற்ற, பார்வைக் குறைபாடுடைய மாணவர்களை வாழ்வகத்தில் இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தங்குமிடம், உணவு, கல்வி வசதிகள், ஏனைய வசதிகள் யாவும் முற்றிலும் இலவசமாகவே வழங்கப்படும். பார்வையற்ற பிள்ளைகளும், ஏனைய பிள்ளைகளுக்குச் சமமாக கல்வியில் முன்னேறக்கூடிய வகையில் உரிய வாய்ப்பு வசதிகள், வழிகாட்டல்கள் வழங்கப்படும்.

பார்வையற்ற, பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளைக் கொண்டுள்ள பெற்றோர்கள் தமது பிள்ளை பற்றிய விபரங்களுடன் எதிர்வரும் 28.02.2015 இற்குப் பிந்தாமல் தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரியுடன் கடிதம் மூலமாகவோ அன்றி நேரிலோ தொடர்பு கொள்ளவும்.

தலைவர், வாழ்வகம்,
சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.
தொலைபேசி: 0212240146

(C/3820)

# இயந்திரங்கள் மூலம் குடாநாட்டில் அறுவடை செய்யும் விவசாயிகள்

## வறிய மக்கள் பாதிப்பு

குடாநாட்டில் நெல் அறுவடையின்போது மனித சக்திக்குப்பதிலாக இயந்திர சக்தியைப் பயன்படுத்துவதில் இதனால் அறுவடையை எதிர்பார்த்திருந்த நூற்றுக்கணக்கான தொழிலாளிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குடாநாட்டில் நெல் அறுவடையின் போது பணத்தையும் நேரத்தையும் சேமிக்கும் வகையில் விவசாயிகள் இயந்திரங்களைப் பயன்படுத்தி துரிதமாக அறுவடையில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு அறுவடை செய்யப்படும் நெல்லை அதிக விலைக்கு விற்பனை செய்யும் நோக்குடன் அவர்கள் போட்டி போட்டுக்கொண்டு அறுவடை செய்வதில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் அறுவடையின் போது மனிதவளத்தைப் பயன்படுத்தினால் பணச் செலவும், காலதாமதமும் ஏற்படுவதாகவும் இதனால நெல் விற்பனையில் தாமதம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கும் விவசாயிகள் இயந்திரங்களைப் பயன்படுத்தி அறுவடையை மேற்கொண்டு வருகின்றனர்.

குடாநாட்டில் போதியளவு அறுவடை இயந்திரங்கள் இல்லாத நிலையில் வன்னியிலிருந்து அவை கொண்டுவரப்பட்டே அறுவடை செய்யப்பட்டு வருவதாகவும் ஒரு ஏக்கர் நெல் அறுவடை செய்வ தற்கு 6000 ரூபா முதல் 7000 ரூபா வரை அறவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நெல்லின் விலை அரசினால் நிர்ணயிக்கப்பட்ட போதிலும் தனியார் வியாபாரிகள் குறைந்த விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்வதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



வவுனியா கற்குழியில் அண்மையில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 5 மாணவர்களுக்கு கற்குழி ஆர்.டி.எஸ். இன் வேண்டுகோளுக்கு அமைவாக தமிழ் விருட்ஷம் சமூக ஆர்வலர்கள் அமைப்பின் செயலாளர் மாணிக்கம் ஜெகனின் தலைமையில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்ட போது. (90)

# சமுர்த்தி மீளாய்வு நடவடிக்கை

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலக வாழ்வின் எழுச்சித் திணைக் களத்தினூடாக சமுர்த்தி மீளாய்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இப்பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம அலுவலர் பிரிவு ரீதியாக சமுர்த்தி பயனாளிகளின் தரவுகள் சேகரிக்கப்படுவதுடன் அதில் நிவாரணம் பெறுவோரின் வருமானம், வாகன வசதி என்பன தொடர்பில் தரவுகள் திரட்டப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்படு கிறது.

மேலும் இத்தரவுகளின்படி மீளாய்வு இடம்பெற்று பயனாளிகள் தெரிவு இடம்பெறும் எனவும் திணைக்களத்தால் அறிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக இவ் மீளாய்வு நடவடிக்கையில் வாழ்வின் எழுச்சித் திணைக்கள முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர், கிராம அலுவலர்கள் ஆகியோர் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எழுத்தாளர் எஸ்.பொவின் நினைவஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மக்கள் கலை இலக்கிய பெருமன்றத்தின் ஏற்பாட்டில் ஈழத்தின் முன்னணி எழுத்தாளர் அமரர் எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ) வின் நினைவஞ்சலி நிகழ்வும் திருவுருவப்படம் திரை நீக்கம் செய்யும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திர ன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வரவேற்புரையினை மக்கள் கலைஇலக்கிய பெருமன்றத்தலைவர் தேவிபரமலிங்கம் வழங்கினார்.

அஞ்சலி உரைகளை யாழ. பல்கலைக்கழக கல்விப் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகன், ச.சரத்சந்திரன் எழுத்தாளர் ஐ.சாந்தன் கவிஞர் சோ.ப ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

நிகழ்விற்கான நன்றியுரையினை எஸ்.பொ.வின் சகோதரன் ச.சரவணமுத்து வழங்கினார்.




நிகழ்வில் எழுத்தாளர்கள் இலக்கிய ஆர்வலர்கள் எஸ்.பொ. வின் உறவினர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (63)

# இலவச கண்ணாடிகளுக்கு அறவிடப்பட்ட கட்டணம்

தமிழ் பௌத்த அமைப்பினால் இலவசக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்.ஒஸ்மானியா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

காலை 9 மணியளவில் ஆரம்பமான நிகழ்வில் 150 இற்கும் மேற்பட்ட மக்கள் மூக்கு கண்ணாடிகளைப் பெற்றுக்கொண்டனர்.



எனினும் இலவசம் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும் பதிவுக் கட்டணமாக 200 ரூபாவும் சாதாரண மூக்கு கண்ணாடிக்கு 200 ரூபாவும், ஏனைய கண்ணாடிகளுக்கு 800 , 1000 ரூபா வசூலிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக இதனை ஏற்பாடு செய்த அமைப்பினரிடம் வினவியபோது தவிர்க்க முடியாத விடயமாக உள்ளது எனத் தெரிவித்தனர்.

# வர்த்தக நிலையங்களின் கழிவுநீரால் டெங்குத் தொற்று ஏற்படும் அபாயம்



கிளிநொச்சி நகரின் தொடருந்து நிலையத்திற்குச் செல்லும் வீதியில் வர்த்தக நிலையங்களின் கழிவுநீர் நீண்டகாலமாக தேங்கிநிற்பதன் காரணமாக தொற்றுநோய்கள் ஏற்படக்கூடிய அபாய நிலை காணப்படுகின்றது. கரைச்சி பிரதேச சபைக்கு அருகிலேயே இக்கழிவுநீர் தேங்கிநிற்கின்றது. உணவகங்கள், மற்றும் விடுதிகளிலிருந்து வெளியேறும் நீர் ஓடிச்செல்ல முடியாத நிலையில் இங்கு தேங்கிநிற்கின்றது. ஏ-9 பாதையின் நீர்வழிந்தோடக்கூடிய கழிவு வாய்க்கால் உயரமாகவும், தற்போது நீர் தேங்கியுள்ள வாய்க்கால் தாழ்வாகவும் அமைந்திருப்பதன் காரணமாக நீர் வழிந்தோடமுடியாத நிலையிலிருப்பதாகவும் வர்த்தக நிலைய உரிமையாளர்களினால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கிளிநொச்சி நகரின் மழைவெள்ளம் மற்றும் கழிவுநீர் தேங்கிநிற்கும் இடங்களிலிருந்து குறித்த நீர் வழிந்தோடக்கூடிய நிலையை உருவாக்காது விட்டால் டெங்கு போன்ற அபாய நோய்கள் உருவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (160)

# நகுலேஸ்வர ஆலய தேர்த்திருவிழா

நகுலேஸ்வர ஆலயத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

கடந்த 04 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான உற்சவத்தின் சப்பறத் திருவிழா எதிர்வரும் 16 ஆம் திகதியும் தேர்த்திருவிழா 17 ஆம் திகதியும் அன்றைய தினமே மகா சிவராத்திரி நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

அன்றைய தினம் பண்ணிசைக் கச்சேரி, புராணப்படலம், இன்னிசைக் கச்சேரி, பஜனை, என்பனவும் இடம்பெறவுள்ளன. தொடர்ந்து 18 ஆம் திகதி தீர்த்தோற்சவம் நடைபெற்று மகோற்சவம் நிறைவு பெறும்.

நேரம் என்பது செலுத்தப்பட்ட அம்பைப் போன்றது; அது திரும்பி வராது. - ஜேஷி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## இணக்க அரசியலும் கூட்டமைப்பும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் இந்த ஆண்டு மார்ச் மாத அமர்வில் இலங்கை மீதான போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணை அறிக்கையை அமெரிக்கா சமர்ப்பிக்காது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தில் பிரதான பங்கு வகித்ததாகக் கூறப்படும் நிலையில், தற்போதைய அரசுக்கு அழுத்தங்கள் தரும் செயல்களை அமெரிக்கா மேற்கொள்ளாது என்பது எதிர்பார்க்கக் கூடியதே.

முன்பு போல அரசுக்கெதிராக போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட்டே தீரவேண்டும் என்று அமெரிக்காவிடம் ஒத்தபடி குரலெழுப்பக் கூடிய திராணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமும் தற்போது இல்லை.

தற்போதைய அரசின் மேலான முடிவுகளைத் தீர்மானிக்கும் தேசிய நிறைவேற்றுச் சபையில் பதினொரு பேரில் ஒருவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் அங்கம் வகிக்கிறார்.

ஆகவே அரசுக்கெதிராக சர்வதேச நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று முன்னைய அரசுக்காலத்தில் குரலெழுப்பியதுபோல் இப்போதும் சர்வதேசத்தை வலியுறுத்துவதாக இருந்தால், சம்பந்தன் அவர்கள் தேசிய நிறைவேற்றுச் சபை அங்கத்துவத்திலிருந்து வெளியேறுவதாக அறிவித்துவிட்டே அதைச் செய்ய முடியும்.

ஆனால் இந்த அரசுடன் இணக்கமாகச் செயற்படுவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் உறுதியாக உள்ளதை வெளிப்படுத்தும் விதமாகவே இரா.சம்பந்தன் அவர்கள் 43 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன்முறையாக இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்து கொண்டிருக்கிறார்.

சுதந்திர தினத்தைப் பகிஷ்கரிக்காது கலந்து கொண்டது ஏன் என்று அவர் அளித்த தன்னிலை விளக்கத்திலும், இணக்க வழிமுறையினூடாக சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை தனக்கேற்பட்டிருப்பதையே அவர் அழுத்தந்திருத்தமாகச் சொல்லியுள்ளார்.

"புதிய அரசில் இருப்பவர்கள் அரசியல் தீர்வுக்கான நல்ல கருத்துக்களைச் சொல்கின்றனர். அவற்றை இன்னமும் நடைமுறைப்படுத்தவில்லை என்றாலும், அதற்கான திட்டங்கள் தயாரிக்கப்படவில்லை என்றாலும், அவற்றில் நாங்கள் பங்காளிகளாக இருக்கின்றோம் என்பதைத் தெரியப்படுத்த வேண்டிய தேவை இருந்தது. அதனாலேயே சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்டோம்" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அரச எதிர்ப்பு என்ற ஒரேயொரு உணர்ச்சிகர ஆயுதத்தையே தங்களது தேர்தல் வெற்றிக்காக நம்பியிருக்கக்கூடிய மாவை சேனாதிராசா, கிளிநொச்சி சிறீதரன், சப்றா சரவணபவன் போன்ற தமிழரசுக் கட்சி எம்பிக்களே இந்த விஷயத்தில் மௌனம் சாதிப்பதை வைத்துப் பார்த்தால், குறைந்தபட்சம் அடுத்த தேர்தல் அறிவிப்பு வரும் வரையாவது அரசுடனான இணக்க அரசியலை ஏற்றுச் செயல்பட அவர்களும் சம்மதித்திருப்பதாகவே தெரிகிறது.

இலங்கை அரசின் அதி உயர் பீடமான தேசிய நிறைவேற்றுச் சபையில் தங்கள் கட்சித் தலைவரும் இணைந்திருந்து, "புதிய அரசின் பங்காளிகளாகவே நாங்கள் இருக்கின்றோம் என்பதைத் தெரியப்படுத்தவே சுதந்திர தினத்தில் பங்குகொண்டதாக" மக்களுக்கு அறிவிக்கவும் செய்திருப்பதை மேற்குறிப்பிட்டவர்கள் எதிர்க்கவில்லை என்பதை கவனிக்க வேண்டும்.

இதுபோன்ற அரசுடன் இணங்கியிருக்கும் சந்தர்ப்பங்களிலும் கட்சியிலேயே ஒளிந்தபடி இருந்துவிட்டு, தேர்தல் அறிவித்தவுடன், தாங்கள் பிறப்பிலிருந்தே அரசை எதிர்ப்பவர்கள் என்பது போன்ற ஆவேசங்களுடன் இவர்கள் மேடைகளில் தோன்றுவார்கள்.

அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா! - *ஆசிரியர்*

# ஆசனிக் நச்சுப் பொருள் அரிசி வகைகளில் கலப்பு

## வெளிநாட்டு பத்திரிகை எச்சரிக்கை

இலங்கையில் உணவுக்கு பயன்படுத்தப் படும் பல வகை அரிசிகளில் ஆசனிக் என்ற பெயர் கொண்ட கடுமையான நச்சுப் பொருள் கலக்கப்பட்டுள்ளதாக Internal Journal Of Food Contamination என்ற வெளிநாட்டு பத்திரிகை சமீபத்திய ஆராய்ச்சி ஒன்றின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறித்த பிரச்சினை தொடர்பாக கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னரே வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள் இலங்கைக்கு வருகை தந்த போது ஊடக சந்திப்பின் மூலம் மக்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளனர்.

எனினும் விவசாயத் துறையில் நிபுணத்துவம் சார் அதிகாரிகள், விவசாய அமைச்சு மற்றும் முன்னாள் விவசாய அமைச்சர்கள் இவை பொய்யான தகவலெனவும் மற்றும் கோதுமை மா சூழ்ச்சி என கூறி அரிசியின் நச்சுத் தன்மை தொடர்பான ஆராய்ச்சியை நிராகரித்துள்ளனர்.

தேசிய பாரம்பரிய நெல்லில் ஆசனிக் அளவு மிக குறைவாகவே காணப்பட்டது. அதற்கான காரணம் பாரம்பரிய நெற்பயிர்ச்செய்கையின் போது இரசாயன கலப்படமற்றமையே என குறித்த பத்திரிகை முக்கிய காரணங்களில் ஒன்றாக சுட்டிக்காட்டியிருக்கின்றது.

ஆயினும் பாரம்பரிய நெல் வகைகளுக்கும் இரசாயன பொருட்கள் உபயோகப்பட்டிருப்பதால் பாரம்பரிய நெல் வகைகளுக்கும் குறித்த ஆசனிக் நச்சு பொருள் கலக்கப்பட்டிருப்பதோடு பார உலோகங்களும் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரிசியில் உள்ள ஆசனிக் நச்சு பொருளினால் புற்றுநோய் மற்றும் வேறு பல நோய்களில் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளதாக ஸ்கொட்லாந்து அறிஞர்கள் ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடித்துள்ளார்கள்.

# இலங்கையில் அதிகரிக்கும் போலி முகநூல் கணக்குகள்

இலங்கையில் போலி முகநூல் கணக்குகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இணைய மோசடிகள் தொடர்பில் கடந்த ஜனவரி மாதம் மட்டும் 150 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக இலங்கை கணனி அவசர அழைப்பு பிரிவின் தகவல் தொழில்நுட்ப சிரேஸ்ட பொறியியலாளர் ரோஹான் சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

போலியான முக நூல் கணக்குகளே அதிகளவான மோசடிகளுக்கான காரணமாக அமைந்துள்ளது. மிரட்டல்கள் பண மோசடி ஏமாற்றல்கள் உள்ளிட்ட பல்வேறு வகையிலான சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

முகநூல் கணக்கு ஒன்றை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல் போன்ற செயற்பாடுகளின் போது பயனர்கள் மிகுந்த கவனத்தை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமானது.

குறிப்பாக தங்களது அடையாளத்தை மிகச் சரியான முறையில் உறுதி செய்யக் கூடிய அதாவது போலி கணக்குகள் உருவாக்கப்பட முடியாத வகையில் கணக்குகளை ஆரம்பிக்க வேண்டுமென சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

# ஓய்வூதியத்தை இழக்கும் நிலையில் 69 நாடாளுமன்ற உறுப்பினர்கள்?

69 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதியத்தை இழக்கக் கூடிய சாத்தியங்கள் ஏற்பட்டுள்ளன.

2010 ஆம் ஆண்டு, முதல் தடவையாக நாடாளுமன்றத்திற்கு தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஐந்து ஆண்டுகள் நாடாளுமன்றத்தில் பதவி வகித்தால் அவர் பூரண ஓய்வூதியம் பெற்றுக் கொள்ள தகுதியுடையவராகின்றார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னதாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால், புதிதாக நாடாளுமன்றத்திற்கு தெரிவான 69 உறுப்பினர்கள் ஐந்து ஆண்டு பதவிக் காலத்தை பூர்த்தி செய்திருக்க மாட்டார்கள்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அடுத்த வாரமளவில் நாடாளுமன்றத்தை கலைத்து ஏப்ரல் முதல் வாரத்தில் பொதுத் தேர்தலை நடத்த நேரிடும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் அறிவித்திருந்தார்.

இவ்வாறு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் 69 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது ஓய்வூதியத்தை இழக்க நேரிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஏப்ரல் 23 ஆம் திகதிக்கு முன்னதாக நாடாளுமன்றம் கலைக்கப்படமாட்டாது என முன்னதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க வாக்குறுதியளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மகிந்தவிற்கு ஆதரவளித்தோரின் கட்சி உறுப்புரிமை இரத்து

### ஐ.தே.க. தீர்மானம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு ஆதரவளித்த உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமையை ரத்து செய்ய ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சகல மக்கள் பிரதிநிதிகளினதும் கட்சி உறுப்புரிமையை இரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் செயற்குழுவினால் நேற்று இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிப்பதாக கட்சி எடுத்த தீர்மானத்தை மதிக்காது ஒரு சில ஐக்கிய தேசியக் கட்சியின் மக்கள் பிரதிநிதிகள், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்சவிற்கு ஆதரவளித்திருந்தனர்.

இவ்வாறு ஆதரவளித்த மக்கள் பிரதிநிதிகளின் கட்சி உறுப்புரிமையை இரத்துச் செய்ய கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

## நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மட்டுமே உள்ளது

### *ஜோன் செனவிரட்ன எம்.பி. தெரிவிப்பு*

நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு மட்டுமே இருக்கின்றது என்று தெரிவித்துள்ள எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான ஜோன் செனவிரத்ன, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் அச்சுறுத்தல் அர்த்தமில்லாததாகும் என்றும் கூறியுள்ளார்.

பொது பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, வெற்றியடையுமாயின் நாடாளுமன்றத்தை கலைத்து விடுவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் நடைபெற்ற வைபவத்தின் போது பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தார்

பிரதமரின் அந்த அறிவிப்புக்கு பதிலளித்த, எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான ஜோன் செனவிரத்ன, நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் பிரதமருக்கு இல்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியினால் மட்டுமே நாடாளுமன்றத்தை கலைக்க முடியும் என்றார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதற்கு முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்தாலோசிக்கப்பட்டதா என்ற கேள்விக்கு பதிலளித்த ஜோன் செனவிரத்ன, இது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற குழு எடுத்த தீர்மானமாகும். இதுதொடர்பில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியிடம் கலந்தாலோசிக்கப்படவில்லை என்றார்.

# கிழக்கு மாகாண முதலமைச்சர்: முரண்பாட்டு அரசியலின் இனவாத அடையாளம்

நவாஸ் செளபி கட்டுரையிலிருந்து

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த நிலையில் கிழக்கு மாகாண சபை ஆட்சியைத் தொடர்வது சம்பந்தமாக இதுவரை இருந்துவந்த முதலமைச்சர் சர்ச்சை முஸ்லிம் காங்கிரஸ் மூலமாக ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது.

முதலமைச்சர் பதவி யாருக்கு வழங்கப்படுகிறது என்பது உள் வீட்டுப் பிரச்சினை. அது இரண்டாம் பட்சமானது: முதன்மையானது முஸ்லிம் காங்கிரஸ் முதலமைச்சைப் பெற்றுக்கொண்டதுதான். அது கட்சிரீதியாக நாம் வெற்றிகண்ட பெரும் சவாலாகவும் இருக்கிறது.

குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கின் முதலமைச்சரைப் பெற்றுக்கொண்டமை கிழக்கில் வாழும் முஸ்லிம் சமூகத்தை மாத்திரமல்லாமல் தேசிய ரீதியாக உள்ள முஸ்லிம்களின் பெறுமானத்தையும் உயர்த்திக் காட்டியிருக்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரை முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராக வருவதற்கு போதிய சாத்தியங்களோடும் நியாயங்களோடுமுள்ள ஒரேஒரு மாகாணம் கிழக்கு மாகாணம்தான். அந்தவகையில் அது 2012 இல் நடைபெற்ற இரண்டாவது கிழக்கு மாகாணசபைத் தேர்தல் மூலம் நஜீப் ஏ மஜீத் அவர்களை முதலமைச்சராக அமர்த்தியதன் ஊடாக ஆரம்பமாகி இருந்தது.

ஆனாலும் வடக்கிலிருந்து பிரிந்து கிழக்கிற்கு 10.05.2008 இல் தனியாக நடைபெற்ற முதலாவது கிழக்கு மாகாண சபைத் தேர்தல் மூலம் அமையப்பெற்ற முதலாவது ஆட்சியில் கிழக்கின் முதலாவது முதலமைச்சர் என்ற வரலாற்றுப் பதிவோடு சி.சந்திர காந்தன் (பிள்ளையான்) கடமை ஏற்றார்.

இவ்வாறு கிழக்கு மாகாணசபையின் முதலாவது முதலமைச்சராக சி.சந்திரகாந்தன் நியமிக்கப்பட்ட போது அவரை தமிழ் சமூகத்தின் அடையாளமாகக் கொண்டு கிழக்கிலுள்ள முஸ்லிம்கள் அதை ஒரு இனவாதமான அரசியலாக்காமல் அக்காலகட்டத்தில் காணப்பட்ட தேசிய அரசியல் நலன்களையும் கருத்தில் எடுத்து அதற்கும் பங்களிப்புச் செய்கின்ற நோக்கில் பிள்ளையானின் கீழ் அவரின் இனம், மதம், கட்சி எதுவும் பாராமல் கிழக்கில் நல்லுறவு மலரவேண்டும் என்ற அடிப்படையில் கிழக்கு முஸ்லிம்கள் அவ்வாட்சியின் பங்காளிகளாக இருந்தார்கள்.

இப்படி முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 2012 இல் நஜீப் ஏ மஜீத் முதலமைச்சரான போதும், கிழக்கின் தமிழ் சமூகங்கள் அதனை ஒரு இனவாதமான அரசியலாக் பெரிய அளவில் தூக்கிப்பிடித்து அதற்கான விமர்சனங்களை அடையாளம் பெறும் வகையில் செய்யவில்லை.

இதன்படி கடந்தகாலங்களில் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த பிள்ளையானும் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த நஜீப் ஏ மஜீதும் முதலமைச்சர்களாக இருந்ததில் கிழக்கில் இவ்விரு சமூகங்களைச் சேர்ந்த யாரும் முதலமைச்சர்களாக வருவதில் இனவாத அடையாள் அரசியல் விமர்சனங்கள் முரண்படுகின்ற அளவில் இருக்கவில்லை.

இதன்மூலம் கிழக்கில் தமிழரோ முஸ்லிமோ முதலமைச்சராக வருவதற்கான அடிப்படை ஒன்றும் உருவாகி இருந்தமையும் அதனை இவ்விரு சமூகங்களும் சரிகாணும் நியாயங்களும் அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் புரிந்துகொள்ளப்பட்டமையும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளும்படி வெளிப்படையாக இருந்தன.

ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் கிழக்கு மாகாண ஆட்சியை அமைக்க ஒரு உடன்பாட்டுடன் என்று பேச்சுக்களை ஆரம்பித்தார்களோ அன்று கிழக்கு மாகாண முதலமைச்சர் என்பது முரண்பாடுகளை உருவாக்கி அதன் மூலம் இனவாத அடையாளம் பூதாகரமாக வெளிப்படும் ஆபத்து நிகழத்தொடங்கிவிட்டது. குறிப்பாக தேசிய அரசியல் என்றாலும் மாகாண அரசியல் என்றாலும் இவ்விரு கட்சிகளும் ஒரு விடயத்தில் தொடர்புபடுகின்ற போது அங்கு இக்கட்சிகளை முந்திக்கொண்டு இனவாதம் மேலோங்கிவிடுகிறது. இரண்டும் சமூக அடையாளங்களைக்கொண்ட அரசியல் கட்சிகள் என்பதனால் இக்கட்சிகளின் செயல்கள் அச்சமூகங்கள் சார்ந்த இனவாதமாகவே இறுதியில் விளைவு பெறுகிறது.

இதனால்தான் இலங்கையில் உள்ள அதிகாரத் தீர்வு குறித்த முடிவுகளை எடுக்கும் எச்சந்தர்ப்பத்திலும் இச் சமூகக் கட்சிகள் ஒருபோதும் ஒன்றுபட்டு நிற்க முடியாது என்பது தெளிவாக தெரிந்த உண்மை.

இதனை கடந்த காலங்களில் பல அரசியல் அனுபவங்கள் எமக்கு உணர்த்தி இருந்தாலும் அண்மைக்காலமாக முஸ்லிம் காங்கிரஸின் தலைமையும் அதன் செயலாளர் நாயகமும் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவது குறித்தும் அவர்களோடு கிழக்கு மாகாண ஆட்சியை அமைப்பது குறித்தும் மிகுந்த நம்பிக்கையான கருத்துக்களை வெளியிட்டுவந்தார்கள்.

ஆனால் அவர்களது நம்பிக்கையில் மண்ணை அள்ளிப் போட்டதுபோல் கிழக்கு மாகாண முதலமைச்சர் விடயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் முதல் அதன் அரசியல் பிரமுகர்கள் பலரும் முஸ்லிம் காங்கிரஸை மிகவும் காட்டமாக விமர்சித்து வருகின்றார்கள்.

ஆனதில் உருவான பேரம் பேசுதலில் முதலமைச்சர் கோரிக்கை முஸ்லிம் காங்கிரஸிடம் இருந்த போதும் அதனை அது பிந்திய இரண்டரை வருடங்களுக்குமாக ஏற்றுக்கொள்வதை உடன்படிக்கை அளவில் எழுதி வைத்திருந்தமை யாவரும் அறிந்த உண்மை. அதன்படி குறிப்பிட்ட காலம் முடிந்தவுடன் அது அக்கட்சிக்கு இயல்பாக கிடைத்திருக்க வேண்டிய ஒன்று.

இடையில் ஜனாதிபதித் தேர்தல் வந்ததில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தில் கிழக்கு மாகாண சபையில் இரண்டாவது ஆசனங்களைப் பெற்ற தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு ஆட்சி அமைப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்ட நிலையில்தான் முஸ்லிம் காங்கிரஸும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் இதுவிடயத்தில் பேச வேண்டிய தேவை ஏற்பட்டது. மேலும் ஏற்கனவே இருந்த் உடன்படிக்கையும் இதில் மாற்றம் கண்டது.

ஆனாலும் இப்பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் நஜீப் ஏ. மஜீத் ஜனாதிபதிக்கு எழுதிய ஒரு கடிதத்தின் மூலம் தனக்கு வழங்கப்பட்ட முந்திய காலம் முடிவடையும் நிலையில் பிந்திய காலத்திற்கான முதலமைச்சர் நியமனத்தை முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அவ்வாறு அமையும் ஆட்சிக்கு தாங்கள் பூரண ஆதரவு வழங்குவது என்றும் தெரிவித்திருந்தார்.


இந்த சமிக்ஞையை வைத்துக் கொண்டு தமிழ் தேசிய கூட்டமைப்புடன் ஆரம்பித்த தங்களது பேச்சுவார்த்தையை நிறுத்திக்கொள்ளாமல், தாங்களுக்கு முதலமைச்சைத் தரமுடியாது என்று தமிழ் தேசிய கூட்டமைப்பு மிக அழுத்தமாக முதலாவது பேச்சில் கூறியும் அதனைப் பொருட்படுத்தாது மேலும் இரண்டு சந்திப்புக்களை அக்கட்சியுடன் முஸ்லிம் காங்கிரஸ் செய்த்தில் உள்ள அரசியல் தேவையும் நம்பிக்கையும் என்ன என்ற கேள்வி எழுகிறது?

தமிழ் தேசிய கூட்டமைப்புடன் சேர்ந்து அரசியல் செய்ய முடியும் எனக் கருதுகின்றவர்களுக்கு இது போதுமான பாடமாகவே இருக்கும் என்பதை இன்னும் விளக்கிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இவ்விரு கட்சிகளும் இவ்விரு சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சியாக இருந்தாலும் இவையே சமூகங்களைத் துண்டாடுகின்ற அரசியல் உபாயங்களையும் முன்னெடுக்கின்றனவா? என்றும் உள்ளார்ந்து நோக்க வேண்டியும் இருக்கின்றன.

உண்மையில் 2012 இல் நடைபெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தல் மூலம் உருவான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிக்கு பங்காளிகளாக

> **குறிப்பாக தேசிய அரசியல் என்றாலும் மாகாண அரசியல் என்றாலும் இவ்விரு கட்சிகளும் ஒரு விடயத்தில் தொடர்புபடுகின்ற போது அங்கு இக்கட்சிகளை முந்திக்கொண்டு இனவாதம் மேலோங்கிவிடுகிறது எனும் வழக்கமான அரசியல் பிரச்சாரங்களை உருவாக்கிவிடுகிறது. இரண்டும் சமூக அடையாளங்களைக்கொண்ட அரசியல் கட்சிகள் என்பதனால் இக்கட்சிகளின் செயல்கள் அச்சமூகங்கள் சார்ந்த இனவாதமாகவே இறுதியில் விளைவு பெறுகிறது.**





இதனால்தான் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இதனை ஒரு இனவாதமான பிரசாரமாக முன்மொழியத் தொடங்கியதோடு, காரசாரமாக ரவூப் ஹக்கீமையும் முஸ்லிம் காங்கிரஸையும் விமர்சித்தனர். ஆரம்பத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் தொடங்கிய பேச்சினை பின்னர் தேசிய அரசியல் முடிவுகள் மாறிய நிலையிலும் முன்னெடுத்தமை ஒரு இனவாதமான முதலமைச்சரை உருவாக்கிய தோற்றத்தை அளித்திருக்கிறது.

முதலமைச்சர் விடயத்தை முஸ்லிம் காங்கிரஸ் கையாண்ட விதம் தமிழ் மக்களுக்கு நியாயமாக வரவேண்டி இருந்த முதலமைச்சரை முஸ்லிம்கள் தட்டிப் பறித்துவிட்டார்கள் என்றவிதமான பிரசாரங்களை உருவாக்கி இருக்கின்றது. எதுவித சத்தமுமில்லாமல் பெற வேண்டிய முஸ்லிம் காங்கிரஸின் முதலமைச்சுப் பதவியைப் பெருத்த இனவாதக் கோஷங்களோடும் சவால் களோடும் பெறும் நிலையை உருவாக்கிய பெரும் தவறை இதில் ஹக்கீம் செய்திருக்கிறார்.

ஏனெனில் கிழக்கு மாகாண ஆட்சியை தமிழ் தேசிய கூட்டமைப்பு அமைப்பதற்கான உத்தரவாதமும் அதற்கான உறுதியான நிலைப்பாடும் இல்லாத நிலையில் அக்கட்சி அதனை உருவாக்க எடுத்த எத்தனத்தில் முஸ்லிம் காங்கிஸும் அவசரப்பட்டு இணைந்து கொண்டதுதான் முஸ்லிம் காங்கிரஸ் செய்த மாபெரும் தவறு.

ஏனென்றால் அரசாங்கம் தங்களுக்கு ஆட்சி அமைக்க முடியாதுள்ளது அதனால் நீங்கள் கூட்டுச் சேருகின்றவர்களுடன் சேர்ந்து ஆட்சியை அமையுங்கள் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு தெரிவிக்கவும் இல்லை. அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுங்கள் என்று அறிவிக்கவும் இல்லை. என்றால் ஆட்சி அமைக்கும் வாய்ப்பு தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு எப்படி உருவானது. அப்படி உருவானதாக அவர்கள் பேசிக்கொள்வது ஒரு மாயைதான்.

> **தமிழ் தேசிய கூட்டமைப்புடன் சேர்ந்து அரசியல் செய்ய முடியும் எனக் கருதுகின்றவர்களுக்கு இது போதுமான பாடமாகவே இருக்கும் என்பதை இன்னும் விளக்கிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.**

தமிழ் தேசிய கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து ஆட்சி அமைத்தால் ஆகக் கூடிய நன்மைகளைப் பெறலாம் என்று அதற்காக ஒரு முன்னெடுப்பை செய்துவிட்டு இறுதியில் அது கைகூடாமல் போனமைக்கு காரணம் முஸ்லிம் காங்கிரஸ்தான் என்ற பழியை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் சுமத்துகின்றனர்.

கிழக்கு மாகாண முதலமைச்சரை தமிழ் தேசிய கூட்டமைப்பிடம் இருந்து முஸ்லிம்கள் தட்டிப் பறித்தார்கள் என்று கூறுகின்ற போது அவ்வாறு ஆட்சி அமைக்க உருவான சந்தர்ப்பம் யாரால் எப்படி உருவானது என்பததை முதலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதாரப்படுத்த வேண்டும். அவ்வாறில்லாது இல்லாத ஒரு அதிகாரத்தை முஸ்லிம் காங்கிரஸ் பறித்துக்கொண்டது என்று ஆத்திரப்படுவது ஆரோக்கியமான சமூக அரசியலுக்கு ஆபத்தையே ஏற்படுத்தும்.

# ஊழலுடன் தொடர்புடையவர்கள் அரசியலில் ஈடுபட தடைவேண்டும்

## வலியுறுத்தும் சரத் அமுனுகம எம்.பி.

ஊழல் செயற்பாடுகளுடன் தொடர்புள்ள மக்கள் பிரநிதிகள் அரசியலில் ஈடுபடுவதற்கு தடை விதிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளாார்.

கண்டி ஹதரலியத்த ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களை வெளியேற்றுவதற்காகவே மக்கள் இந்த தேர்தலில் வாக்களித்தனர். துவிச்சக்கர வண்டிகளில், மோட்டார் சைக்கிள்களில் வந்து தமது ஆடைகளை சிமெந்து பைகளில் கொண்டு வந்தவர்கள் பென்ஸ் கார்களில் செல்ல ஆரம்பித்தனர். அவ்வாறு ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் இருந்தால் கட்சி வேறுபாடு இன்றி அவர்களை அரசியலில் இருந்து நீக்க வேண்டும். அவர் குற்றவாளியாக உறுதிப்படுத்தப்பட்டால் அவரை அரசியலில் இருந்து தடை செய்ய வேண்டும். அவர்களை விரட்ட 100 நாட்கள் போதாது என்றால் 300 நாட்களை பெற்றுக் கொள்ளுங்கள். தற்போது வேறு முயற்சிகள் இடம்பெறுகின்றன. குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் ஊடாக தண்டனை வழங்க வேண்டும். அரசியல் ரீதியிலும் தண்டனை வழங்க வேண்டும். எனத் தெரிவித்தார்.

# நினைக்கும் அளவிற்கு பேய் கறுப்பு அல்ல

## என்கிறார் அமைச்சர் ஜோன்



(கொழும்பு)

நினைக்கும் அளவிற்கு பேய் கறுப்பு நிறமில்லை என சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் சிங்கள ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்ன நடக்கின்றது என இவ்வாறான பல்வேறு சவால்களை ஏற்கனவே எனது அரசியல் வாழ்க்கையில் சந்தித்திருக்கின்றேன்.

விமர்சனங்களையும் கருத்துக்களையும் வெளியிட எதிர்க்கட்சியினருக்கு அவகாசம் உண்டு. அதில் எவ்வித தலையீடுகளையும் செய்யப் போவதில்லை.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் கருத்து வெளியிடப் போவதில்லை என ஜோன் அமரதுங்க குறித்த சிங்கள ஊடகத்திற்கு தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்றை கலைக்க அவசியம் எதுவும் இல்லை

## பிரதீபா மகாநாமஹேவா தெரிவிப்பு



அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்படுவதனால், நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டிய தேவையில்லையென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மகாநாம ஹேவா தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.கட்சியின் சிறிகொத்த காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையில், நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டால் நாடாளுமன்றம் உடன் கலைக்கப்பட வேண்டி வரும் எனத் தெரிவித்திருந்தார்.

இது குறித்து நேற்றுக் காலை சிங்கள வானொலி சேவையொன்று கலாநிதி பிரதீபா மகாநாம ஹேவாவிடம் வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுவது அரசாங்கத்திற்கு எதிராக அல்ல. ஒரு அமைச்சரின் செயற்பாடு தொடர்பில். எனவே, நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டால் அமைச்சரை மாற்ற வேண்டுமே அல்லாமல் நாடாளுமன்றத்தைக் கலைப்பதல்ல எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# வட,கிழக்கு மக்களின் பிரச்சினைக்கு தீர்வை விரைந்து காணவேண்டும்

## மல்வத்து பீட மகாநாயக்கர் தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென மல்வத்தை பீடத்தின் மகாநாயக்க தேரர் வண. திப்பொட்டுவாவே சிறி சித்தார்த்த சுமங்கள தேரர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் செயலர் பி.எம். யு.டி.பஸ்நாயக்க நேற்று முன்தினம் கண்டி தலதா மாளிகையில் வழிபாடு செய்த பின்னர், அஸ்கிரிய, மல்வத்தை பீடங்களின் மகாநாயக்க தேரர்களையும், ராமங்ன்ன நிக்காயவின் பீடாதிபதியையும் சந்தித்து ஆசி பெற்றுக்' கொண்டார்.

இதன்போது கருத்து வெளியிட்ட மல்வத்தை பீடத்தின் மகாநாயக்க தேரர், 'முன்னர் போர் நடந்த வடக்கு, கிழக்குப் பகுதி மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன.அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.' என்று கேட்டுக் கொண்டார்.


அதேவேளை, வெளிநாடுகளில் பிரிவினைச் செயற்பாடுகள் நாட்டின் அமைதிக்கு ஆபத்தாக உள்ளதாக, அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர், வண. உடுகம சிறி புத்தரகித்த தேரர், பாதுகாப்புச் செயலரிடம் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு கட்டத்திலும். வடக்கு, கிழக்கின் பாதுகாப்பு தொடர்பாக சமரசத்துக்கு இடமளிக்கப்படக் கூடாது என்றும் அஸ்கிரிய பீடாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

இதற்கு பாதுகாப்புச் செயலர், வடக்கு, கிழக்கில் பாதுகாப்பைக் குறைக்கும் எந்தத் திட்டமும் இல்லை என்று அஸ்கிரிய பீடாதிபதியிடம், உறுதியளித்துள்ளார்.

# - நம்பிக்கையில்லாத் தீர்மானம் - நிறைவேற்றப்பட்டால் நாடாளுமன்றம் கலைப்பு

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

வத்தளை பிரதேச சபையின் தலைவர் உட்பட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் மீது தாக்குதல் நடாத்தியதாக தெரிவித்து சட்டம் ஒழுங்கு மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், நாடாளுமன்றம் கலைக்கப்படும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகம் சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் முற்பகல் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றினால், 18 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை நீக்கும் சந்தர்ப்பத்தை நாடு ·இழக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பான யோசனையில் 114 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளதுடன் அது சபாநாயகர் ஷமல் ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்டுள்ள அரசியலமைப்புத் திருத்தங்களை இதனால், நிறைவேற்ற முடியாது போகும்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்த விவாதத்தை நடத்தி உடனடியாக திகதியை ஒதுக்குமாறு, பிரதமர், சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தவிர்க்கும் வகையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அலரி மாளிகையில் பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.

இந்தப் பேச்சில் எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா, ஜோன் செனிவிரத்ன, சுதந்திரக் கட்சியின் செயலாளர் அநுர பிரியதர்சன யாப்பா, டிலான் பெரேரா, மகிந்த அமரவீர மற்றும் திலங்க சுமதிபால ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

இதன்போது எதிர்காலத்தில் எந்தவொரு எதிர்க்கட்சி உறுப்பினர் மீதும் தாக்குதல் நடாத்தப்படமாட்டாதென பிரதமர் ரணில் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு உத்தரவாதம் அளித்தார்.

# எதிர்வரும் பொதுத் தேர்தலில் 2014 வாக்காளர் இடாப்பே

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலிலும் அநேகமாக 2014 வாக்காளர் இடாப்பே பயன்படுத்தப்படும் என தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. தற்போது வெளியாகியுள்ள தகவல்படி பொதுத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் இடம்பெறவுள்ளது. தேர்தல் வேட்பு மனு தாக்கல் கால எல்லை மற்றும் தேர்தல் தினத்தை தெரிவு செய்வது ஜனாதிபதியின் அதிகாரத்திற்கு உட்பட்ட விடயம் என்பதால் வெளியிடப்படும் வர்த்த மானி அறிவித்தலுக்கு அமைய செயற்படவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது. 2015 வாக்காளர் இடாப்பு திருத்தம் எதிர்வரும் ஜூன் மாதம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முரண்பாடுகளை தோற்றுவிக்க முயலும் மக்கள் பிரதிநிதிகளுக்கு அறையுங்கள்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அறிவுறுத்து



சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எந்தவொரு மக்கள் பிரதிநிதியாவது குழப்பங்களை விளைவித்தால் அல்லது முரண்பாடுகளை தோற்றுவித்தால், பொதுமக்களாகிய நீங்கள் அவர்களுடைய கன்னத்தில் அறையுங்கள் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நிட்டம்புவ பொது விளையாட்டு மைதானத்தில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

அங்கு தொடர்ந்து பேசிய முன்னாள் ஜனாதிபதி,

மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான எமது பயணத்தை ஆரம்பிக்கும்போது எம்மோடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்திருக்கவில்லை. ஆனால் மக்களாகிய நீங்கள் எமக்கு ஆதரவாக இருந்தீர்கள். அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சியும் இந்தப் பயணத்தில் பாரிய பங்களிப்பினைச் செய்திருந்தது.

மக்கள் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் கறைபடியாதவர்களாக இருப்பது மிக அவசிய மாகும்.

அந்த வகையில் இந்த புதிய ஆட்சிப் பயணத்தில் இணைந்து கொள்வோமானால் நல்ல முறையில் பண்பானதும் ஒழுக்கமுள்ளதுமான நாட்டை கட்டியெழுப்ப முடியும்.

ஆகவே பண்பான நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்தின் போது சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த எந்த வொரு மக்கள் பிரதிநிதியும் குழப்பங்களை விளைவித்தால் அல்லது குழப்பகரமான சூழலை தோற்றுவித்தால் எந்தவிதத்திலும் தயங்காது பொதுமக்கள் அவர்களது கன்னத்தில் அறையுங்கள்.

மோசடிகாரர்கள், குற்றமிழைத்தவர்கள் எவரும் மக்கள் பிரதிநிதிகளாக செயற்பட அருகதையற்றவர்கள்,

இந்த விடயத்தில் நான் உங்களோடு இருப்பேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சி சிவபுரம் பாடசாலையின் வகுப்பறைக்கட்டடம் புனரமைப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்தில் அமைந்துள்ள ஆனையிறவு சிங்கள தமிழ்க் கலவன் பாடசாலையில் சேதமடைந்து காணப்பட்ட ஒரேயொரு தற்காலிக ஓலை கொட்டகை வகுப்பறை கட்டடம் நான்கு இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் இயங்கி வருகின்ற இந்த பாடசாலை தரம் ஐந்து வரை வகுப்புக்களை கொண்ட ஆரம்ப பாடசாலையாகும். இங்கு தற்போது 150 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

பாடசாலை அமைந்துள்ள காணியானது பாடசாலைக்கு சொந்தமான காணி அல்ல என்பதனால் பாடசாலைக்கான நிரந்தர வகுப்பறை கட்டடங்களை அமைப்பதற்கு அரசு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் எவையும் முன்வரவில்லை. இதனால் பாடசாலை ஆரம்பிக்கும் போது தற்காலிக ஓலை கொட்டகையில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிலையில் தற்காலிக ஓலை கொட்டகை சேதமுற்று மாணவர்கள் கற்றலில் ஈடுபடுவதில் இடையூறுகளை சந்தித்து வந்த நிலைமை தொடர்பில் சிவபுரம் மக்களும் பாடசாலை சமூகமும் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமாரின் கவனத்திற்கு கொண்டு வந்தமையையிட்டு அவர் தனது 2014 ஆண்டின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் நான்கு இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்து பாடசாலை ஓலையாக காணப்பட்ட கூரையினை நிரந்தரமாக புனரமைப்புச் செய்து வழங்கியுள்ளார்.

இருந்தும் குறித்த பாடசாலை மேலும் பல்வேறு பௌதீக வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கி வருகின்றது எனவும் தங்களது பிள்ளைகள் ஏனைய பாடசாலைகள் மாணவர்கள் போன்று கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட முடியாத நிலைமை காணப்படுவதாகவும் தெரிவிக்கும் பெற்றோர்கள் வடக்கு மாகாண கல்வி அமைச்சு தங்கள் பாடசாலை எதிர்நோக்கியுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் கவலை தெரிவித்துள்ளதோடு விரைவில் தங்கள் பாடசாலையின் பிரச்சினைகளை தீர்க்க உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (29)



முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலில் தமிழ் விருட்சம் அமைப்பினூடாக மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (90)

# தமிழ்மொழித்தினப் போட்டிகள் பாடசாலைகளுக்கு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டிகளில் பாடசாலை மட்ட போட்டிகள் யாவும் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பு நடாத்தி முடிக்கப்படல் வேண்டும் என்று கல்வியமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

தமிழ்மொழித்தினப் போட்டிகளின் வலயமட்ட போட்டிகள் யாவும் மே 10 ஆம் திகதிக்கு முன்பு நடாத்தி முடிக்கப்படல் வேண்டும். அதே போன்று தமிழ் மொழித் தினப் போட்டிகளின் மாகாண மட்டப் போட்டிகள் யாவும் மே 30 ஆம் திகதிக்கு முன்பு நடாத்தி முடிக்கப்படல் வேண்டும்.

தேசியமட்டப் போட்டிக்கான விண்ணப்பங்கள் யாவும் மே 31 ஆம் திகதிக்கு முன்பதாக கல்வியமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் சுற்றுநிருபம் மூலம் கல்வியமைச்சு கேட்டுள்ளது.


அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டிகளும் விழாவும் ஜுன் மாதம் 13 ஆம் 14 ஆம் திகதிகளிலும் செப்ரெம்பர் 19 ஆம் 20 ஆம் திகதிகளிலும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிரார்த்த தினம் 19.07.1947 ஆகும். அதனையொட்டியே தேசிய தமிழ்த்தின விழா யூலை 19 ஆம் திகதி நடைபெற வேண்டுமென கல்வியமைச்சு தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் மேம்பாலம் அமைக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி அக்கராயன்பகுதியில் மேம்பாலம் ஒன்றினை அமைத்துத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அக்கராயன்குளம் வான் வெள்ளம் வீதியினை குறுக்கறுத்துப் பாய்கின்ற இடத்திலேயே இம்மேம்பாலத்தினை அமைத்துத்தருமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. திருமுருகண்டியிலிருந்து வன்னேரிக்குளம் செல்லும் வீதியில் அக்கராயன்குளத்தின் வான்வெள்ளம் குறுக்கறுத்துப் பாயும்.



மழை காலத்தில் தாழ்வாக அமைக்கப்பட்டுள்ள பாலம்வழியாக வெள்ளம் வீதியினை மூடிப் பாய்வதன் காரணமாக அக்கராயன் மத்தியபகுதிக்கும் அக்கராயன் கிழக்குப் பகுதிக்குமான போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டு குறிப்பாக அக்கராயன் பிரதேச மருத்துவமனையின் நோயாளர் வண்டி கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு பயணிக்க முடியாது போக்குவரத்துத் தடை ஏற்படுவதாக மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

குளத்தின் வான்வெள்ளம் குறைந்த பின்னர்தான் மக்கள் போக்குவரத்தில் ஈடுபடக்கூடிய நிலை ஏற்படுவதாகவும் எனவே குறித்த வான்வெள்ளம் பாய்கின்ற இடத்தில் மேம்பாலம் ஒன்றினை அமைத்துத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (160)

# மல்லாவி மாணவி மட்டு.வில் உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

கிழக்கு பல்கலைக்கழகத்தின் மட்டக்களப்பு, கல்லடி சுவாமி விபுலானந்தா இசை, நடனக்கல்லூரியினுடைய மூன்றாம் வருட மாணவி ஒருவர் சுகவீனம் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை காலை உயிரிழந்துள்ளதாக அப்பல்கலைக்கழகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி, யோகபுரத்தைச் சேர்ந்த சி.வாமிலா (வயது 24) என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கல்லடி சுவாமி விபுலானந்தா இசை, நடனக்கல்லூரிக்கு பின்புறமாகவுள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்து கல்வி பயின்றுவந்த இந்த மாணவி, இரு தினங்களுக்கு முன்னர் வயற்றுவலி மற்றும் காய்ச்சல் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த மாணவியின் மரணம் தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## முரசின் இன்றைய பலன்

(10.02.2015 செவ்வாய்க்கிழமை)

ஜய வருஷம் தை மாதம் 27 ஆம் திகதி.
ஷஷ்டி திதி /சித்த யோகம்.
சித்தரை நட்சத்திரம். மு.ப. 11.10 வரை. பின் சுவாதி.
இராகு காலம 03.34 - 05.04 வரை. சுபநேரம 11.04 - 12.34 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — நோய்குணமடைய கிரகசாந்திகள் செய்ய முற்படல்.

**ரிஷபம்** — துணையின்றித் தனிவழியே தனித்துச்சென்று அவதிப்படல்.

**மிதுனம்** — குருட்டு அதிர்ஷ்டம் எதிர்பாராது ஏற்பட்டுவிடல்.

**கடகம்** — சறுக்கல், வழுக்கலினால் தேக உறுப்பு பாதிக்கப்படல்.

**சிம்மம்** — சட்டத்திற்கு மாறான செயலில் ஈடுபட்டதால் தண்டம் பெறல்.

**கன்னி** — சகஊழியர்களுடன் சுமுக நிலையைப் பேணியதால்பணி சிறப்படைதல்.

**துலாம்** — ஏழரைச்சனி கடைக்கூறு நடப்பதினால் கஸ்டங்கள் விலகல்.

**விருச்சிகம்** — ஆவணக்குறைபாட்டினால் பதவி கிடைக்காத நிலை ஏற்படல்.

**தனுசு** — நிலுவை கூடியதால் மின்பாவனை தற்காலிகமாக துண்டிக்கப்படல்.

**மகரம்** — தற்காலிக அரசுப்பணி நிரந்தரமாதல்கண்டு மகிழ்ச்சி அடைதல்.

**கும்பம்** — நோய் குணமடைவதினால் அச்சமும் பதகளிப்பும் நீங்குதல்.

**மீனம்** — வெளியூர் பயணம் பற்றிய தித்திப்பான முடிவு செவிக்கெட்டுதல்.

## மொகமட் ஹபீஸ் விலகல்

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான பாகிஸ்தான் அணியிலிருந்து சகல துறை வீரர் மொகமட் ஹபீஸ் விலகியுள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியின் போது ஹபீஸ் கணுக்காலில் காயமடைந்தார். காயம் குணமடைய மூன்று வாரங்கள் ஓய்வு எடுக்கும்படி ஹபீஸுக்கு மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இதையடுத்து உலகக்கிண்ண போட்டியிலிருந்து 34 வயதான ஹபீஸ் நேற்று முன்தினம் விலகினார். அவர் உடனடியாக தாயகம் திரும்புகிறார்.

அவரது விலகல் பாகிஸ்தானுக்கு பெருத்த பின்னடைவாக கருதப்படுகிறது. அவருக்கு பதிலாக நசிர் ஜாம்ஷெட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரில் ஆட விருப்பது பெருமகிழ்ச்சி அளிக்கிறது. இதனை என்னால் இன்னமும் நம்பமுடியவில்லை. எந்தவொரு வீரரும் ஒரு பெரிய போட்டிகளில் ஆடவேண்டும் என்ற கனவுடன் இருப்பார். ஆனால் அந்தக் கனவு எல்லோருக்கும் பலிப்பதில்லை என நசிர் ஜாம்ஷெட் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானுடனான மோதல் சவாலானது

(அடிலெய்ட்)

உலகக்கிண்ண தொடரில் முதன்முறையாக ஆடவிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. பாகிஸ்தானுடனான ஆட்டம் சவால் நிறைந்ததாக இருக்கும். அதற்காக ஏனைய ஆட்டங்கள் முக்கியத்துவம் இல்லை என குறிப்பிடவில்லையென இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரோகித் சர்மா தெரிவித்துள்ளார்.

உலக கோப்பையில் இந்தியா தனது முதல் ஆட்டத்தில் வருகிற 15ஆம் திகதி பாகிஸ்தானுடன் மோதவுள்ளது. இதில் எப்படியாவது இந்தியாவை வீழ்த்த வேண்டும் என்று பாகிஸ்தான் அணியினர் தயாராகி வருகிறார்கள்.

இது குறித்து இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரோகித்சர்மா கூறியதாவது: உலக கோப்பையில் எல்லா ஆட்டங்களிலும் முக்கியம். பாகிஸ்தானுக்கு எதிரான போட்டி எப்போதுமே மிகப்பெரியது. உலக கோப்பையில் இந்தியாவை பாகிஸ்தான் வென்றதில்லை என்பதால் எங்களை விட அவர்களுக்கு தான் நெருக்கடி அதிகமாக இருக்கும். ஆனாலும் அதில் நாங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.



உலக கோப்பையில் முதல் முறையாக விளையாடுவது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. 1992ஆம் ஆண்டு உலக கோப்பையில் அலன்போர்டரின் பிடியை அஜய் ஜடேஜா டைவ் அடித்து பிடித்தது இன்றும் ஞாபகம் இருக்கிறது.

இதுபோல் 2003ஆம் ஆண்டு செஞ்சூரியனில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியை மறக்க முடியாது. டெண்டுல்கரின் ஆட்டத்தில் அனல் பறந்தது. அந்தப் போட்டியில் முதல் பந்து முதல் கடைசி பந்து வரை விறுவிறுப்பாக இருந்தது. போட்டி முடியும் வரை தொலைக்காட்சியிலிருந்து என் கண்களை நான் திருப்பவே இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ICC CRICKET WORLD CUP 2015

## பயிற்சி ஆட்டங்கள்

**இலங்கை/தென்னாபிரிக்கா**



இலங்கை 279/7 (44.4)
டில்சான் - 100
மத்தியூஸ் - 58

தென்னாபிரிக்கா 188/5 (24.3) (25)
டி கொக் - 66

டக்வேர்த் லூவிஸ் முறையில் ஐந்து விக்கெட்டுக்களால் தென்னாபிரிக்கா வெற்றி

ஆட்டநாயகன் : டி கொக்

**மே. தீவுகள்/இங்கிலாந்து**

மே.தீவுகள் 122/10 (29.3)
சைமன்ஸ் - 45

இங்கிலாந்து 125/01 (22.5)


ஒன்பது விக்கெட்டுக்களால் இங்கிலாந்து வெற்றி.
ஆட்டநாயகன் : மொய்ன் அலி.

**நியூசிலாந்து/சிம்பாப்வே**

நியூசிலாந்து 157/07 (30.1)
குப்ரில் - 100

மழையால் ஆட்டம் கைவிடப்பட்டது.

## ஆஸியின் கொட்டத்தை அடக்குவோம்



(சிட்னி)

உலகக் கிண்ணத்தை வெல்லும் முனைப்புடன் செயற்படும் அவுஸ்ரேலிய அணியின் ஆதிக்கத்தை நடப்பு தொடரில் முறியடிப்போம் என தென்னாபிரிக்க அணிக் கப்டன் ஏ.பி.டீவில்லியர்ஸ் தெரிவித்துள்ளார்.

ஆஸி. அணி ஒருநாள் கிரிக்கெட்டில் முதல்நிலை என்பதை மறுக்க முடியாது. அது உள்நாட்டில் விளையாடுகின்றது. இதனால் அனுகூலங்கள் அதிகம். இதனால் கொஞ்சம் அழுத்தம் கூட அவர்களுக்கு இருக்கும்.

ஆனால், இந்த முறை உலகக்கோப்பை வெல்லும் அணியில் எங்கள் அணியும் உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. உலகில் தலைசிறந்த அணி தென்னாபிரிக்கா என்ற பெயரை மகிழ்ச்சியுடன் அணுகுகிறோம். சிம்பாவேயில் அவுஸ்ரேலியாவை சமீபத்தில்தான் வெற்றி பெற்றுள்ளோம்.

எனவே, உலகின் சிறந்த அணி என்ற முதலிடத்தைப் பிடிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. இந்த உலகக்கோப்பையில் அதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இது ஒரு மிகப்பெரிய வாய்ப்பு, இதைத் தவறவிடமாட்டோம் என்று நம்புகிறோம்.

அவுஸ்ரேலியா தவிர நியூசிலாந்து ஒரு அபாயகரமான அணி. பிரண்டன் மக்கல்லம் ஒரு அருமையான கப்டன், அணியை பிரமாதமாக வழிநடத்திச் செல்கிறார் என்றார்.

## மீளெழ அவகாசம் இன்னும் உண்டு

### பந்துவீச்சாளர்களுக்கு கவாஸ்கர் அறிவுரை

(அடிலெய்ட்)


இந்திய அணியின் பந்து வீச்சைப் பலப்படுத்தக்கூடிய வாய்ப்பு முற்றாக இல்லாமல் இல்லை. அதற்கான நேரம் இன்னமும் இருக்கின்றது என்பதை கிரிக்கெட் நிர்வாகம் மறந்துவிடக்கூடாது. அதற்கான ஆக்கபூர்வ முயற்சிகளை கிரிக்கெட் சபையும், பந்து வீச்சாளர்களும் மேற்கொள்ள வேண்டும் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

உலக கோப்பை கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அதற்கு முன்பு பயிற்சி ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் பயிற்சி ஆட்டத்தில் அவுஸ்ரேலியாவிடம் இந்தியா தோற்றது. அவுஸ்ரேலிய அணி 371 ஓட்டங்கள் குவித்தது. இந்தியா 265 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது.

இந்திய பந்துவீச்சாளர்கள் ஓட்டங்களைக் கட்டுப்படுத்த தவறிவிட்டனர். இதேபோல் துடுப்பாட்டமும் சரியில்லை. இதனால் இந்திய அணி கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கிறது.

இந்திய அணி மீது முன்னாள் கப்டனும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான சுனில் கவாஸ்கர் கடுமையாக பாய்ந்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது:

இந்திய பந்துவீச்சில் முன்னேற்றம் இல்லை. நிறைய ஷொட்பிட்ச் பந்துகளை வீசினர். யோர்க்கர் பந்துகளை வீசவில்லை. சுழற்பந்து வீச்சும் சாதாரணமாகவே இருந்தது. இந்திய பந்து வீச்சாளர்களிடம் நம்பிக்கையே இல்லை என்றே நினைக்கிறேன். ஆனால் அதை அவர்களால் மாற்ற முடியும். அதற்கான நேரம் இன்னும் இருக்கிறது. இது பயிற்சி ஆட்டம்தான். உலக கோப்பை



தொடங்குவதற்கு முன்பு தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஊக்குவிக்க உளவியல் ஆலோசகர்
## கிண்ணம் வெல்ல இலங்கையின் உத்தி இது

(கொழும்பு)

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் விளையாடவுள்ள இலங்கை அணியினரை ஊக்குவிக்கும் பொருட்டு உளவியல் ஆலோசகராக ஜெரெமி ஸ்னேப் நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இப்பதவியில் அவர் நியமிக்கப்பட்டிருப்பது இது இரண்டாவது தடவையாகும்.

இங்கிலாந்துக்கு எதிரான தொடரின்போதும் இலங்கையின் உளவியல் ஆலோசகராக ஜெரெமி செயற்பட்டிருந்ததுடன் அந்தத் தொடரை இலங்கை கைப்பற்றியிருந்தது.

ஜெரெமி ஸ்னேப் இம் மாதம் 24ஆம் திகதி முதல் மார்ச் 9 ஆம் திகதி வரை 14 நாட்களுக்கு இலங்கை அணியினருடன் இணைந்து செயற்படவுள்ளார்.

உலகக் கிண்ணத்தை மனதில் நிறுத்தி இலங்கை வீரர்கள் ஒவ்வொருவரினதும்தனிப்பட்ட ஆற்றல்களை அதிகரிக்கச் செய்வதற்கான ஆலோசனைகளை வழங்குவார் என இலங்கை கிரிக்கெட் சபை தெரிவிக்கின்றது.

தற்போதைய மிக முக்கிய சூழலில் அவரது நியமனம் வீரர்களின் ஆற்றல்களை அதிகபட்சம் வெளிக்கொணர உதவும் என இலங்கை கிரிக்கெட் சபை மேலும் குறிப்பிட்டுள்ளது.

கிரிக்கெட் சபையின் இந்த நடவடிக்கை குறித்து முன்னாள் வீரர்கள் பலர் பாராட்டுத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தோல்வியால் சீற்றம் கொண்ட சிங்கம்

(மெல்பேர்ன்)

உலக கிண்ண பயிற்சிப்போட்டியில் அவுஸ்ரேலியாவுடன் அடைந்த தோல்வியை அடுத்து, இந்திய அணித்தலைவர் டோனி விசனம் வெளியிட்டுள்ளார்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் ஒரு தரப்பினர் சொதப்புவதால் ஏமாற்றமே எஞ்சியுள்ளதாக டோனி கவலை வெளியிட்டுள்ளார்.

துடுப்பாட்டம் சரியாகும் போது, பந்து வீச்சாளர்கள் சொதப்புகிறார்கள். பந்துவீச்சாளர்கள் நன்றாக செயற்படும் போது, துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றி விடுகிறார்கள். இது எங்களுக்கு மிகவும் கடினமாக இருக்கிறது.

இப்பிரச்சினையை சரி செய்ய வேண்டியது அவசியம். இப்போது எது முக்கியம் என்றால், உலக கிண்ண கிரிக்கெட்டில் ஆரம்ப ஆட்டத்திற்கு முன்பாக எங்களுக்கு ஆப்கானிஸ்தானுடன் மட்டுமே பயிற்சிப் போட்டி இருக்கிறது. அதற்குள் நாங்கள் களம் காணும் 11 பேர் கொண்ட சரியான அணியை அடையாளம் காண வேண்டும். இந்த பயிற்சி ஆட்டத்தில் இருந்து சில நல்ல விடயங்களை எடுத்துக் கொண்டோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெற்றி குறித்து அவுஸ்ரேலிய அணியின் பயிற்றுநர் லீமன் கருத்து தெரிவிக்கையில், பயிற்சி ஆட்டங்கள் முக்கியத்துவம் மிக்கவைதான். எங்களைப் பொறுத்த வரையில் உள்ளூரில் போட்டிகள் நடைபெறவுள்ளதால் ஏனைய அணிகளைவிட எங்களுக்கு சற்று நெருக்கடி இருக்கிறது. ஏனெனில் உள்ளூர் இரசிகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் ஆடவேண்டும். எனவே ஒவ்வொரு ஆட்டத்தையும் இறுதி போன்றே எதிர்கொள்வோம் என தெரிவித்துள்ளார்.







மன்னார் சென்சேவியர் விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள், சீருடைகள் அண்மையில் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில், மாந்தை மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் வரப்பிரகாசம், மன்னார் நகரசபை உறுப்பினர் ரட்ணசிங்கம் குமரேஸ், மன்னார் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் பர்சூக், மாந்தை மேற்கு விளையாட்டு உத்தியோகத்தர் அஸார் யுனைட், கழக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (160)

## உயிர் ஆபத்துக்களை தடுக்க விசேட குழு நியமனம்

### கல்வி அமைச்சர் அதிரடி

(கொழும்பு)

மரதன் மற்றும் உயிர் ஆபத்துக் களை ஏற்படுத்தக்கூடிய போட்டிகளில் வீர, வீராங்கனைகள் எதிர்கொள்ளும் விபத்துக் கள் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழுவொன்று உடனடியாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வாரம் நியமிக்கப்படவுள்ள இந்தக் குழுவில் விளையாட்டுப் பணிப் பாளர்கள் மற்றும் வைத்தியர்கள் உள்ளடங்குவரெனவும் அவர் கூறினார்.

அம்பாந்தோட்டை போலான மஹா வித்தியாலயத்தில் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவன் கடந்த 06ஆம் திகதி இடம்பெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் ஈடுபட்டிருந்த வேளை, திடீரென மயங்கி மரணமுற்ற சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் இந்தக் குழு நியமனம் தொடர்பில் கூறினார்.

குறித்த மாணவன் மரதன் போட்டி யில் கலந்து கொள்வதற்கு முன்ன தாக வைத்திய சான்றிதழ் ஒன்றை பெற்றிருந்தார்.

மாணவர்கள் விளையாட்டில் ஈடுபட வேண்டியது கட்டாயம். ஆகையால், நியமிக்கப்படும் குழு அது தொடர்பில் ஆராயுமெனவும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே, மரதன் ஓட்டப் போட்டி யில் ஈடுபட்டிருந்த மாணவனொருவன் உயிரிழந்தமையை தொடர்ந்தே விளையாட் டுத்துறையில் ஈடுபடும் மாணவர்களுக்கு மருத்துவச் சான்றிதழ் கட்டாயமாக்கப் பட்டது.

இந்நிலையில், இரத்தினபுரியில் மரதன் ஓடிய மேலுமொரு மாணவி உயிரிழந் துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## நேதாஜியின் மென்பந்து கிரிக்கெட் வல்வை றெயின்போ வசம் கிண்ணம்

(வல்வை)

வல்வை நேதாஜி விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை வல்வை றெயின்போ அணி கைப்பற் றிக்கொண்டது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை றெயின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் தீருவில் இளைஞர் அணி யும் வல்வை றெயின்போ அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய திருவில் இளைஞர் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 66 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய றெயின்போ அணி ஆறு ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைநததுடன் கிண்ணத்தையும் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டித் தொடரின் ஆட்டநாயகனாக ஜெகன் (றெயின்போ), சிறந்த விக்கெட் காப்பாளர் பிரகலாதன் (றெயின்போ), இறுதிப் போட்டியின் சிறந்த பந்து வீச்சாளர் மயூரனும் (தீருவில் இளைஞர்), சிறந்த துடுப்பாட்ட வீரர் பிரண- வன் (றெயின்போ), வளர்ந்து வரும் இளம் வீரருக்கான விருது காசன் (தீருவில் இளைஞர்), சிறந்த களத்தடுப்பாளர் சுதாகரன் (தீருவில் இளைஞர்) ஆகியோருக்கு விருது வழங்கப்பட்டது.

## விளையாட்டுச் செய்திகள்

### இல்ல மெய்வல்லுநர்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத் தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் அருட்சகோதரி மேரி லாசர் தலைமையில் நடைபெற வுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறீதரன், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட கபடி அணி பயிற்றுநரும் விளையாட்டு உத்தியோகத்தருமான குமுகுந் தன் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர்.

◆❑❑◆

(வல்வை)

வல்வை சிவகுரு வித்தியாசாலை யின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 13ஆம் திகதி வெள் ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு தீரு வில் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் சு.ஜெயானந்தகுமார் தலைமையில் நடை பெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிர தம விருந்தினராக திருமதி அபிராமி பார்த்தீபன் (பிரதிக் கல்விப்பணிப்பாளர். கல்வி அபிவிருத்தி வடமராட்சி) கலந்து கொள்ளவுள்ளார்.

## எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய முயற்சிப்பேன்



(ஹமில்டன்)

அணி நிர்வாகம், ஆதரவாளர்கள் என்னிடம் எதிர்பார்க்கும் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் செயற்பட முயற்சிப்பேன் என இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் மலிங்க கடந்த செப்ரெம்பர் மாதத்தில் இருந்து சர்வதேச ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கவில்லை. கணுக்காலில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட அவர் தற்போது பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். உலகக்கிண்ண இலங்கை அணியில் மலிங்க எதிரணி களை அச்சுறுத்தும் வீரராக இருப்பதால், அவர் மீது எதிர்ப்பார்ப்பு அதி- கமாக வுள்ளது. இதனால் அவருக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அவரது உடற்தகுதி குறித்து ஊடகங்கள் தொடர்ச்சியாக கேள்வி எழுப்பி வருகின்றன.

இது தொடர்பாக மலிங்க கூறுகையில், கடந்த சில தினங்களாக வழக்கமாக ஓடி வந்து வீசுவது போல் வீசிவருகிறேன். நான் நல்ல இசைவில் இருப்பதாகவே உணர்கிறேன். பயிற்சிப் போட்டிகளுக்காக காத்திருக்கிறேன். நெருக்கடி தருணங்கள் என்றால் என்னவென்றே எனக்குத் தெரியாது. அது போன்ற தருணங்கள் எனக்கு பழக்கமானவை. அதனால் நெருக்கடி பற்றி தனியாகப் பேச வேண்டினால் எனக்கு அதைப்பற்றித் தெரியாது என்றே கூறுவேன். நான் எப்போதும் எங்கு விளையாடுகிறேன், சூழ்நிலைகள் என்ன என்பதையெல்லாம் பார்ப்பதில்லை. அணியின் வெற்றிக்கு எனது பங்களிப்பு இப்படி இருக்க வேண்டும் என்பதுதான் என் இலக்கு. எனவே, என்னிடம் தேர்வுக்குழு மற்றும் இரசிகர்கள் எதிர்பார்க்கும் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் செயற்பட முயற்சிப்பேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## விலகல்




உலகக்கிண்ண இலங்கை அணியில் தெரிவு செய்யப்பட்ட வேகப்பந்து வீச் சாளர் தம்மிக பிரசாத் காயம் காரண- மாக அணியிலிருந்து விலகியுள்ளார்.

உலகக்கிண்ணப் போட்டிகள் எதிர் வரும் 14ஆம் திகதி அவுஸ்ரேலியா. நியூசிலாந்தில் ஆரம்பமாகவுள்ளது. அதற்கு முன்னதாக 14 பயிற்சி ஆட்டங்கள் நடைபெறுகின்றன.

இந்நிலையில் பிடி பயிற்சியில் ஈடு பட்டுக் கொண்டிருந்த தம்மிக பிரசாத் துக்கு பந்து தாக்கியதில் கையில் பல மான காயம் ஏற்பட்டது.உடனே எக்ஸ்-ரே எடுத்துப் பார்த்தபோது எலும்பில் முறிவு ஏற்பட்டுள்ளது தெரியவந்தது.

இதனால் அவர் அணியிலிருந்து விலகி யுள்ளார். அவருக்கு பதில் ஏரங்கா. துஷ்மன்தா சமீரா ஆகியோரில் ஒருவர் இடம் பெறலாம் என்று தெரிகிறது.

இலங்கை அணியில் பல வீரர்கள் காயத்தால் அவதிப்பட்டு வரும் நிலை யில், தம்மிக பிரசாத்தின் விலகல் அணிக்கு நெருக்கடியை அதிகப்படுத்தி யுள்ளது.



# சுதந்திரக் கட்சியின் தோல்வி முகம்

- புருஜோத்தமன் தங்கமயில் கட்டுரையிலிருந்து.

ஆட்சி மாற்றத்தின் பின்னரான நாடாளுமன்ற அமர்வுகள் புதுமையான காட்சிகளை அரங்கேற்றியது. நாட்டின் பிரதான கட்சிகளின் தலைவர்கள் இருவரும், அதாவது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் அருகருகே ஒரே அணியில் இருக்கின்றார்கள்.

ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப - தலைவர் நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்ட பெரும்பான்மை உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்ந்திருந்தார்கள். கட்சியொன்றின் தலைவர் (ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன) அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதும், கட்சியின் உப-தலைவர் உள்ளிட்ட பெரும்பான்மை உறுப்பினர்கள் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்துவதும் இலங்கை வரலாற்றில் இதுதான் முதன்முறை.

நாடாளுமன்றத்தில் மொத்தமுள்ள 225 உறுப்பினர்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 127 உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்றது. ஆனாலும், அக்கட்சி எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையை ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வழங்கியிருக்கின்றன.

தேசிய அரசாங்கத்தின் 100 நாட்கள் வேலைத்திட்டத்துக்கு தமது ஆதரவினை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வழங்கவுள்ளதாக அறிவித்தாலும், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்கிற அச்சமும், அந்தத் தேர்தலில் தோல்வியடைந்தால் எதிர்வரும் 6 வருடங்களுக்கு எதிர்க்கட்சி வரிசையிலேயே உட்கார வேண்டி வந்து விடுமோ என்கிற அச்சமும் அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு இருக்கின்றது.

மிகவும் சிக்கலான நிலைக்குள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இப்போது சிக்குண்டிருக்கின்றது. மஹிந்த ராஜபக்ஷவை முன்னிறுத்தி தேர்தலை எதிர்கொள்ள முடியாது. அதற்கு கட்சி யாப்பு அனுமதிக்காது. ஐக்கிய தேசியக் கட்சியை முன்னிலைப்படுத்தும் தேசிய அரசாங்கத்திலும் முழுமையாக ஐக்கியமாக முடியாது. அது, கட்சியை பெருமளவு சிதைத்துவிடும். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை மீளமைத்து முன்னிறுத்தலாம் என்றால் அதற்கு கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கட்சியின் போசகர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க உள்ளிட்டவர்கள் உடன்படுவர்களா என்கிற சந்தேகம்.

இப்படியான நிலையில் தான், புரிபடாத சூழ்நிலையொன்றொடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் நாடாளுமன்ற அமர்வுகளை எதிர்கொள்கின்றனர்.

இதற்கு அண்மையில் அரங்கேறிய காட்சியொன்றை உதாரணமாகக் கொள்ள முடியும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் பிரதம நீதியரசராக மொஹான் பீரிஸ் நியமிக்கப்பட்டமை சட்டவிரோதமானது என்று கூறி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தேசிய அரசாங்கம், மீண்டும் ஷிராணி பண்டாரநாயக்கவை பிரதம நீதியரசர் பதவியில் அண்மையில் அமர்த்தியது. அவரும் ஒருநாள் பதவி வகித்துவிட்டு ஓய்வு பெற்றார்.

இந்த விவகாரம் நாடாளுமன்றத்தில் பெரும் சச்சரவுகளை ஏற்படுத்தியிருந்தது. மொஹான் பீரிஸினை நீக்கியது தவறு என்று எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் முக்கியஸ்தர்கள் கோசமிட்டனர். விவாதமொன்றுக்கான சந்தர்ப்பமொன்றையும் கோரினர்.

அப்போது, குறுக்கிட்ட பிரதமர் ரணில் விக்ரமசிங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரைப் பார்த்து, "நீங்கள் இங்கு கூச்சலிட்டால் உங்களின் தலைவரிடம் முறையிடுவேன். உங்களின் தலைவர் தான் எங்களின் ஜனாதிபதி" என்றார். அந்தப் பதிலை ரணில் விக்ரமசிங்க மிகவும் நக்கலான தொனியிலேயே முன்வைத்திருந்தார். இந்தக் காட்சியொன்றே சொல்லிவிடும் இப்போதுள்ள நாடாளுமன்றத்திலும், அரசியல் களத்திலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரின் நிலைமையை உணர்வதற்கு.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலை இப்படியென்றால், சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நாடாளுமன்றத் தேர்தலை வெற்றி கொள்வதற்கான முயற்சிகளில் ஐக்கிய தேசியக் கட்சி பெரும் முனைப்போடு ஈடுபட்டிருக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பிலான விசாரணைகள்

---

# கே.வி. மகாதேவன் 55

- பி.ஜி.எஸ்.மணியன் -

"துணைவன்" வெளிவந்த 1970ஆம் ஆண்டில் தொடர்ந்து கே.வி. மகாதேவனின் இசையில் வெளிவந்த படங்களில் மாபெரும் வெற்றிப்படங்களும் இருந்தன. சுமாரான ஓட்டம் கண்ட படங்களும் இருந்தன. ஏன்? படுதோல்வி அடைந்த படங்களும் இருந்தன.

சுமாரான ஓட்டம் கண்ட படங்களின் வரிசையில் கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின் "தபால்காரன் தங்கை" முக்கிய இடம் பிடித்தது.

ஜெமினி கணேசன், முத்துராமன், வாணிஸ்ரீ ஆகியோர் நடித்திருந்த இந்தப் படத்திற்காக கே.வி. மகாதேவன் இசை அமைப்பில் கண்ணதாசன் எழுதிய "கரிகாலன் கட்டிவைத்தான் கல்லணை" என்ற பாடல் ரசிகர்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது. டி.எம்.எஸ். - பி.சுசீலா பாடியிருந்த இந்தப் பாடலின் மெட்டும், இணைப்பிசையும் குறிப்பிடப்படவேண்டிய ஒன்று.

"நூறாண்டு காலம் வாழ்க" - ஏ.வி.எம். ராஜன் - காஞ்சனா, எம்.என்.நம்பியார் - வெண்ணிற ஆடை நிர்மலா நடிப்பில் வெளிவந்த இந்தப்படம் வந்த வேகத்திலேயே சுருண்டு போனதால் பாடல்களின் தரம் பற்றி அறியமுடியவில்லை.

ஆனால் அதே ஆண்டில் வெளிவந்த மக்கள் திலகம் - நடிகர் திலகம் ஆகியோரின் படங்கள் மகாதேவனின் திறமைக்கு மீண்டும் வெற்றிமாலை சூட்டின.

எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா நடித்த "என் அண்ணன்" படப் பாடல்கள் அனைவரையும் முணுமுணுக்க வைத்தன. கண்ணதாசன் - வாலி இருவரின் கற்பனையில் மிதந்துவந்த வார்த்தைகளுக்கு தன் இசையால் உயிர் கொடுத்தார் கே.வி.மகாதேவன்.

"நெஞ்சம் உண்டு நேர்மை உண்டு ஓடு ராஜா" - டி.எம்.எஸ்.

"நீல நிறம் வானுக்கும் மண்ணுக்கும் நீல நிறம்" - டி.எம்.எஸ். - எஸ். ஜானகி குரல்களில் மெலடி என்றால்,

நாட்டுப்புறத்து காதலை அருமையாக சித்தரிக்கும் துள்ளல் மெட்டில் ஒரு "சலக்கு சலக்கு சிங்காரி" என்று இருவேறுபட்ட எல்லைகளையும் தொட்டார் மகாதேவன்.

"கடவுள் ஏன் கல்லானான்?" பாடலை மறக்க முடியுமா?

மக்கள் திலகம் - கே.வி.மகாதேவனின் வெற்றிக்கூட்டணி ஒரு வெள்ளிவிழாப் படத்தையும் தந்தது. அதுதான் "மாட்டுக்கார வேலன்".

எம்.ஜி.ஆர். இரட்டை வேடங்களில் நடித்திருந்தார்.

"சத்தியம் நீயே தர்மத் தாயே" - நாட்டுப்புற மெட்டில் ஒரு கோமாதாவின் புகழ் பாடும் பாடல். முன்பு முழுக்க முழுக்க கர்நாடக இசையில் அவர் கொடுத்த கோமாதா என் குலமாதா பாட்டுக்கு முற்றிலும் வேறுபட்ட நடை.

கிராமியக் கதாநாயகன் தன்னிடம் காதல் வயப்பட்ட பட்டணத்து நங்கையின் நடவடிக்கைகளை தன்னைப்போன்ற தோற்றத்தில் இருக்கும் படித்த நாகரீக வாலிபனுக்கு விளக்கும் பாடல் "ஒரு பக்கம் பாக்குறா" - டி.எம்.எஸ். பாடும் இந்தப் பாடலுக்கு மகாதேவனின் டியூனும், இணைப்பிசையும் சபாஷ் போட வைக்கின்றன.






"பட்டிக்காடா பட்டணமா" - டி.எம்.எஸ் - எல்.ஆர். ஈஸ்வரியின் பாடல் விறுவிறுப்பான இணைப்பிசையாலும் அமைப்பாலும் சிறந்த இன்னொரு பாடல்.

மாடு மேய்க்கும் மாட்டுக்காரன் - சட்டம் படித்த வாலிபன் இருவரும் தத்தம் ஜோடியுடன் இணைந்து பாடும் டூயட் பாடல். "பூவைத்த பூவைக்கு பூக்கள் சொந்தமா" டி.எம்.எஸ். - பி.சுசீலா - எல்.ஆர்.ஈஸ்வரி ஆகிய மூவரும் பாடும் பாடல். பாடலுக்கான அமைப்பிலேயே இரு வேறுபட்ட கதாபாத்திரங்களையும் அவர்கள் பாடும் பாடலின் மெட்டிலேயே வேறுபடுத்திக் காட்டி இருப்பது மகாதேவனின் தனித் திறமைக்கு ஒரு சான்று.

"தொட்டுக்கொள்ளவா" - டி.எம்.எஸ். - பி.சுசீலா அருமையான இந்த மெலடிப் பாடலின் மெட்டு இன்று ஒரு ஊறுகாய் விளம்பரத்தில் கேட்கிறது.

இப்படி மக்கள் திலகத்துடன் இணைந்து சாதித்த கே.வி.மகாதேவன் நடிகர் திலகத்துடன் இணைந்த படம் "வியட்நாம் வீடு". ப்ரெஸ்டீஜ் பத்மநாப அய்யராக நடிகர் திலகம் வாழ்ந்து காட்டிய படம்.

"பாலக்காடு பக்கத்திலே" பாடல் அடைந்த வெற்றி - இன்று "யாரடி நீ மோகினி" படத்தில் ரீ-மிக்ஸ் செய்யப்படும் அளவுக்கு மறக்கமுடியாமல் அமைந்திருக்கிறது.

"உன் கண்ணில் நீர் வழிந்தால்" - டி.எம்.எஸ் பாடும் இந்த உருக்கமான பாடலுக்கு மகாதேவன் அமைத்த மெட்டும், இணைப்பிசையும் மெய்மறக்க வைக்கும் அளவுக்கு அமைந்துவிட்டிருக்கிறதே.

என்றாலும் இந்த இரண்டு பாடல்கள் மட்டும் தான் படத்தில் நிற்கும் பாடல்களாக அமைந்துவிட்டன.

இயக்குநர் சிகரம் கே.பாலச்சந்தர் முதல் முதலாக நடிகர் திலகம் சிவாஜி கணேசனோடு இணைந்த படம் "எதிரொலி". நடிகர் திலகத்தோடு மட்டும் அல்ல. கே.வி.மகாதேவனுடனும் கே.பாலச்சந்தர் இணைந்த ஒரே படமும் இதுதான். மிகப் பெரிய எதிர்பார்ப்பை ரசிகர்களிடம் ஏற்படுத்திவிட்டு பரிசாக பெரிய ஏமாற்றத்தை தந்த படம்.

பாலச்சந்தர் படமாகவும் இல்லாமல், சிவாஜிகணேசன் படமாகவும் இல்லாமல் ஒரு இரண்டுங்கெட்டான் நிலையில் படம் அமைந்து விட்டதால் "எதிரொலி" வெற்றியை எதிரொலிக்க தவறிவிட்டது. பாடல்களும் அப்படியே அமைந்துவிட்டன.

என்றாலும் இப்போது தொலைக்காட்சிகளின் தயவால் "குங்குமச் சிமிழில் மகதுளை முத்துக்கள் கொட்டிக் கிடப்பதென்ன" என்ற டி.எம்.எஸ். பாடல் மட்டும் அவ்வப்போது கேட்கவும் பார்க்கவும் கிடைக்கிறது. (பாடல் காட்சியில் இடம்பெறுபவர்கள் சிவகுமார் - லக்ஷ்மி)

(தொடரும்)

என்கிற வடிவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களை கட்டம் கட்டியிருக்கின்றது. இப்போது வரையில் வெளிநாடுசெல்ல முடியாதவாறு முன்னாள் அமைச்சர்கள் பலரது கடவுச்சீட்டுக்கள் முடக்கப்பட்டுவிட்டன.

எந்தவொரு தருணத்திலும் சிறுபான்மைக் கட்சிகள் தேசிய அரசாங்கத்துக்கு எதிராக திரும்பிவிடக் கூடாது என்பதையும் ஐக்கிய தேசியக் கட்சி கருத்தில் கொண்டு செயலாற்றுகின்றது.

நீண்ட காலத்தின் பின் நாட்டின் ஜனநாயகமும், இன நல்லிணக்கமும் ஏற்பட்டிருக்கின்றது என்கிற கோசமும், நாட்டினை அமைதிப்பூங்காவாக ஆட்சி செய்வதற்கான அனுமதியைக் கோருகின்றோம் என்கிற வடிவில் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகியிருக்கின்றது.

தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி உள்ளிட்ட சிறுபான்மைக் கட்சிகள் பல ஐக்கிய தேசியக், கட்சி தலைமையிலான கூட்டணியில் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளலாம்.

...கள் விடுதலை முன்னணியும், சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தனித்தனியாகவே தேர்தலை எதிர்கொள்ளப்போகின்றன. தேர்தலில் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி அமைக்கும் அரசாங்கத்திற்கு வெளியில் இருந்து ஆதரவளிக்கத் தயார் என்கிற நிலைப்பாட்டினை மக்கள் விடுதலை முன்னணியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வெளியிட்டிருக்கின்றன.

சரத் பொன்சேகா அரசாங்கத்தில் இணைந்து கொள்ளவுள்ளதாகவும் அறிவித்திருக்கின்றார். இப்படியான நிலையில், இப்போதுள்ள தேசிய அரசாங்கத்தின் மாதிரியொன்றையே நாடாளுமன்றத் தேர்தலின் பின்னரும் அமைப்பதற்கான முயற்சிகளை பொது எதிரணிக் கட்சிகள் முன்னெடுக்கின்றன. அதில், குறிப்பிட்டளவு வெற்றிபெறுவதற்கான சூழலும் இருப்பதை உணர முடிகின்றது.

ஏனெனில், மஹிந்த ராஜபக்ஷ போன்று சிங்கள மக்களிடம் அபிமானம் பெற்ற ஒருவரை இப்போதுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கொண்டிருக்கவில்லை.

இப்போது, மஹிந்த ராஜபக்ஷ, சிங்கள மக்களிடம் கொண்டிருந்த அபிமானத்தையே அதிருப்தியாக தேசிய அரசாங்கம் மாற்றிக் கொண்டிருக்கின்றது. அது, மஹிந்த ராஜபக்ஷவின் மீதான அதிருப்தியாக மட்டுமில்லாமல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீதான அதிருப்தியாகவும் உருமாறியிருக்கின்றது.

இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி நிறைவேற்று அதிகார முள்ள நாடாளுமன்றத்தை உருவாக்கவும், அதில் ஆட்சியமைக்கவும் ஐக்கிய தேசியக் கட்சி முனைப்போடு செயற்படுகின்றது.

## வெறி கொள்ளச் செய்யும் வார்த்தை!



**ஹொ**லிவுட்டின் அழகு தேவதை ஜெனீபர் லோபசுக்கு, 46 வயது முடிந்து, 47 வயது தொடங்கப் போகிறது எனக் கூறினால், அவரின் ரசிகர்கள் கொலை வெறியாகி விடுகின்றனர். இந்த வயதிலும், தன் கட்டுடலால், ஹொலிவுட் ரசிகர்களைக் கட்டிப் போட்டுள்ளார். சமீபத்தில், அவர் நடிப்பில் வெளியான, The Boy Next Door என்ற படம், மிகப் பெரிய வெற்றியைபெற்று, ஹொலிவுட்டை ஆச்சர்யப்படுத்தியுள்ளது. இத்தனைக்கும், இந்தப் படத்தில், அப்படி ஒன்றும் புதுமையான கதையோ, தொழில்நுட்பமோ இல்லை. ஜெனீபர் என்ற ஒற்றை வார்த்தைக்காகவே, இப்படத்தை மெகா வெற்றி பெற வைத்துள்ளனர் ரசிகர்கள். "இப்படிப்பட்ட ரசிகர்கள் இருக்கும் வரை, சினிமாவிலிருந்து ஓய்வு பெறுவதை நினைத்து கூட பார்க்க முடியாது..." என்கிறார் ஜெனீபர்.

## இளைஞர்களின் நாடு!



**ஆ**பிரிக்கா, இளைஞர்கள் நாடாக மாறுகிறதோ என்ற சந்தேகம் ஏற்பட்டு உள்ளது. அடுத்த நூற்றாண்டில், ஆபிரிக்காவில் தான், இளைஞர்கள் அதிக அளவில் இருப்பர் என, "யூனிசெப்" நிறுவன ஆராய்ச்சியில் கண்டுபிடித்துள்ளனர். மக்கள் தொகை வளர்ச்சி, இப்படியே போனால், 2100இல் உலகில், 18 வயதுக் குட்பட்டவர்கள் பாதிப் பேர் ஆபிரிக்காவில் தான் இருப்பர் என்கிறது யூனிசெப் மனிதகுலத்தின் வருங்காலம் ஆபிரிக்காவில் தான் இருக்கிறது என்று ஆபிரிக்கா பற்றி ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடத் தொடங்கி உள்ளனர்.

## சர்வதேசத்தின் முன் இலங்கையை நிறுத்தும் தமிழர் அரசியல் எதிர்கொள்ளும் நெருக்கடிகள்

- சாலையூரான்



**போ**ர்க்குற்ற விசாரணைகளுக்காக இலங்கையை சர்வதேசத்தின் முன் நிறுத்தும் தமிழ் கூட்டமைப்பினரின் அரசியல் தற்போது ஒரு நெருக்கடி நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறது.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட இந்த ஐந்தாண்டு காலத்தில் இடம்பெற்ற நான்கு தேர்தல்களிலும் இறுதி யுத்தத்திலும் இடம்பெற்ற அடிப்படை உரிமை மீறல்களுக்காக இலங்கையை சர்வதேசத்தின் முன் நிறுத்துதல் என்பதே தமிழ் கூட்டமைப்பின் தாரக மந்திரமாக இருந்து வந்திருக்கிறது.

சர்வதேசம் இந்தத் தேர்தலை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறது; எல்லா ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன; தமிழ் மக்கள் தமது வாக்கை தமிழ் கூட்டமைப்புக்கு வழங்குவதுதான். பாக்கி என்பதாகவே அவர்களின் இறுதிக்கட்ட தேர்தல் பிரசாரங்கள் எப்போதும் அமைந்திருக்கும்.

ஆனால் நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தல் சர்வதேசத்தை வைத்து நாடகமாடும் தமிழ் கூட்டமைப்பினரை ஒரு நெருக்கடி நிலைக்குள் இப்போது தள்ளிவிட்டிருப்பதாக தெரிகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை பதவியிலிருந்து இறக்குவதற்காக தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபாலவின் தரப்பை நிபந்தனையின்றி ஆதரிக்க தமிழ் மக்களை வழிநடத்தியதன் மூலம் தமிழ் கூட்டமைப்பினர் இந்த நெருக்கடியை இப்போது எதிர்கொண்டிருக்கிறார்கள்.

இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி ராஜாங்க செயலர் நிஷா பிஸ்வால், இலங்கை மீது போர்க்குற்றங்களுக்கெதிரான வலுவான தீர்மானத்தை ஐநா மனித உரிமைகள் சபையில் கொண்டு வருவது தென்னிலங்கை தேசியவாத சக்திகளுக்கு உந்துதலாக அமைந்து விடும் என்றொரு கருத்தை தமிழ் கூட்டமைப்பினரிடம் முன்வைத்திருப்பதாக தெரிகிறது.

அவ்வாறு இலங்கைக்கெதிராக தீர்மானம் முன்வைக்கப்பட்டால் அது நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் மகிந்த மீண்டும் அதிகாரத்துக்கு வர வாய்ப்பாக அமைந்து விடலாம் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியதாகவும் சொல்லப்படுகிறது.

இதுவரை காலமும் அமெரிக்காவுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டிருந்த மகிந்தவின் அரசியல் தமிழ் கூட்டமைப்பினரின் வாக்குவங்கி அரசியலுக்கு வலுச்சேர்க்கும் ஒன்றாக அமைந்திருந்த நிலையில் புதிய அரசாங்கத்தின் அமெரிக்க சார்பு நிலைப்பாடு சர்வதேசத்தின் பெயரால் அரசியல் நடத்தும் தமிழ் கூட்டமைப்பினருக்கு இப்போது சோதனையாக மாறிவிட்டிருப்பதாக தெரிகிறது.

நிஷா பிஸ்வால் கூறியிருப்பதற்கிணங்க இலங்கைக்கெதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் எதிர்வரும் மார்ச் ஜெனிவா கூட்டத்தொடரில் தள்ளிவைக்கப்படுமாயின் நிஷா பிஸ்வாலின் இந்த பிந்திய அறிவிப்போடு அமெரிக்காவுக்கு எதிரான தமது நிலைப்பாட்டை தமிழ் கூட்டமைப்பினர் வெளியிடுவதே அவர்களின் நேர்மையான ஒரு அரசியலாக இருக்க முடியும்.

போர்க்குற்ற விசாரணைகளின் பெயரால் இலங்கைக்கெதிராக இதுவரை அமெரிக்கா மேற்கொண்ட முனைப்புகள் அனைத்தும் அதன் பிராந்திய அயலுறவுக்கொள்கை நலன்சார்ந்து முன்னெடுக்கப்பட்டனவே தவிர இலங்கைத் தமிழர்களின் நலன்கள் சார்ந்து அல்ல என்பதை தமிழ் கூட்டமைப்பினர் ஒத்துக்கொள்ள வேண்டும்.

அவ்வாறே சர்வதேசத்தின் பெயரால் நடாத்திய தமது அரசியல் ஒரு போலி நாடகமென்பதையும் ஏற்றுக் கொண்டு அவர்கள் அதனை வெளிப்படுத்த வேண்டும்.

தமிழ் கூட்டமைப்பின் அரசியல் இவ்வாறெல்லாம் பிசுபிசுத்துவிட்ட நிலையில் பிந்தியதாக இனப்பிரச்சினை தீர்வுக்கு புதிய அரசாங்கம் காலவரையறையொன்றை அறிவிக்க வேண்டும். இல்லையேல் இந்த விவகாரத்தை சர்வதேசத்தின் முன் கொண்டு செல்வோம் என நல்லூரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் மாவை கருத்து வெளியிட்டிருக்கிறார்.

தீர்க்கப்படாதுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளை உரிய முறையில் அணுகி தீர்க்கும் புதிய அரசாங்கத்தின் நியாயமான நடவடிக்கைகளை நிபந்தனையின்றி ஆதரிப்போம் எனக் கூறிய தமிழ் கூட்டமைப்பினர் வடக்கின் அரசியல் நிர்வாக நிலைமைகளைக் கையாளவென புதிய அரசாங்கம் வழங்க முன்வந்த அமைச்சுப் பொறுப்புக்களை நிராகரித்திருக்கிறார்கள்.

அமைச்சுப் பொறுப்புக்களுக்காக பின்னடிப்பது அரசுக்கெதிரான எதிர் நிலைப்பாட்டின் பெயரால் தமது வாக்கு வங்கிகளை தக்கவைக்கும் ஒரு தந்திரோபாயமே என்பது அரசுத்தரப்பால் உணரப்பட்டிருக்கும் நிலையில் படைக்குறைப்பு, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, மீள்குடியேற்றம் போன்ற தமிழ் கூட்டமைப்பின் கோரிக்கைகளும் ஒரு தேக்க நிலைக்குள் இப்போது சென்றிருப்பதாக தெரிகிறது.

நடைபெறப்போகும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் எப்படியாவது அரசுடன் உள்ள உறவை முறித்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் வாக்குகளுக்காக மக்களிடம் செல்லும் போது இந்த அரசிடமிருந்து எதனை பெற்றுத் தந்திருக்கிறீர்கள் என்கிற கேள்விக்கு பதிலளிப்பது சிரமமாக இருக்கும்.

எவ்வாறிருப்பினும் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபாலவின் புதிய அரசாங்கத்துக் கெதிரான தமிழ் கூட்டமைப்பின் அவதூறுப் பிரச்சாரங்களை அதி உச்ச அளவில் நாம் எதிர்பார்க்கலாம்.


# குறுக்கு "மறுக்கு" எழுத்துப் போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பா | து | சீ | டெ | யொ | மு | ஸ் | ம் |
| க | ரு | வா | டு | டி | ச | கை | ன |
| று | வ | ந | ப | யா | ய | லா | சீ |
| கொ | ண் | மெ | ல | டா | னி | ன் | எ |
| டு | ம் | லு | க் | அ | வு | ட் | று |
| பு | கெ | பு | கை | சி | வி | ரு | ம |
| ளி | ஓ | வா | ந | ன் | கோ | ப | ண |
| ம | ட் | டை | அ | சி | ட் | டை | ல் |

இங்கே கட்டங்களில் எழுத்துக்கள் சிதறிக்கிடக்கின்றன. இவற்றுள் நாங்கள் கேட்ட கேள்விகளுக்கான பதில்களும் இருக்கின்றன அவை மேல் கீழாகவோ, கீழ் மேலாகவோ இடம்வலம் அல்லது வலம் இட மாகவோ, சாய்வாகவோ குறுக்கு மறுக்காகவோ இருக்கும். ஆனால் தொடர்எழுத்துக்களாக இருக்கும். அவற்றைக் கண்டுபிடித்து கட்டத்தில் வட்டம் போட்டுக் காட்டுங்கள்

1. பிசாசு மீனின் புகழ்பெற்ற உறுப்பின் பெயர் ..................
2. ........... ஆல்ட்ரின் என்பவர் நிலவில் இறங்கி நடந்தவர்களுள் ஒருவர்
3. நான்கே மணி நேரத்தில் உலகின் எந்தப் பகுதிக்கும் செல்ல உதவும் விமானம் .............
4. எலிப்பொறிக்குள் வைத்த பொருள் ..........
5. ரூபி அருவி அமைந்துள்ள மலையின் பெயர் ............
6. சொரி பழத்தில் .......... என்ற நோய் எதிர்ப்புப் பொருள் உள்ளது
7. சோளம் பொரியும்போது வெளிவரும் வாசனைக்குக் காரணமான இரசாயனம் ...........
8. கிறிஸ்துமஸ் தீவின் பிற மொழிகளுள் ஒன்று மலாய் மற்றொன்று ...........
9. ராபல்லெட் எந்த நாட்டில் பாறைகளைக் குடைந்து குகைகளை உருவாக்கியுள்ளார்?
10. ராபல்லெட் உருவாக்கிய குகைக்குள் உள்ள படுக்கை, தலையணை எதனால் செய்யபபட்டவை ............
11. கடல் பிசாசு மீனின் கொம்பிலிருந்து வெளி வருவது .............
12. தேங்காயை உடைத்துச் சாப்பிடும் உயிரினம் .................
13. ஜுராசிக் பார்க் திரைப்படத்தின் ஆரம்பக் காட்சியில் வரும் அருவியின் பெயர் ............
14. ஆசியாவிலேயே மிகப்பெரிய அருவி .........

## வரைந்து பழகுவோம்






## விடுகதைகள்

1. சுற்றும்போது மட்டும் சுகம் தருவாள். அது என்ன?

2. செய்தி வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே. அது என்ன?

3. கல்லுக்கும் முள்ளுக்கும் அஞ்சாதவன், பள்ளநீரைக் கண்டு பதை பதைக்கிறான். அது என்ன?

4. கலர்ப்பூ கொண்டைக்காரி, காலையில் எழுப்பிவிடுவாள். அது என்ன?

5. கந்தல் துணி கட்டியவன், முத்துப் பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்தான். அது என்ன?

6. கடலிலே கலந்து, கரை யிலே பிரிந்து, தெருவிலே திரியும் பூ எது?

7. கறுப்புக் காகம் ஓடிப்போச்சு. வெள்ளைக் காகம் நிற்குது. அது என்ன?

8. காலாறும் கப்பற்கால் கண்ணிரண்டும் கீரை விதை. அது என்ன?

9. மழையோடு வருகின்ற மஞ்சள் புறாவை வெட்டினால் ஒரு சொட்டு இரத்தம் வராது. அது என்ன?

10. உருவத்தில் சிறியவன் உழைப்பில் பெரியவன். அவன் யார்?

# பெரிய தண்டனை



அரிசி மூட்டைகள் ஆயிரக்கணக்கில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் பெரியஅறை. அந்த அறைக்குள் ஆட்கள் திடீரென வருவதும், சில மூட்டைகளைத் தூக்கிச்செல்வதும் பின் அறையை மூடி விடுவதுமாக இருப்பார்கள். அவை அனைத்துமே கள்ளக்கடத்தலுக்கும், கலப்படம் செய்வதற்கும் பயன்படுத்தப்படும் அரிசி மூட்டைகள்.

அந்த அறைக்குள் இரண்டு எலிகள் இருந்தன. அவை மூட்டைகளைக் கடித்து ஓட்டையிட்டு அரிசியைத் தின்று வாழ்ந்து வந்தன.

அந்த மூலையில் இருந்து இந்த மூலைக்கு ஓடுவதும், மூட்டைகளின் மீது ஏறிக் குதித்து விளையாடுவது மாய்க்காலம் கழித்தன.ஒரு நாள் மூட்டைகளைத் தூக்க வந்தவர்களில் ஒருவன்மூட்டை ஓட்டையிட்டு, கிழிந்து அரிசி கொட்டியிருப்பதைக் கண்டான் முதலாளி, இந்த இடத்திலே எலி இருக்குங்க என்றான்.

அப்படின்னா, கருவாட்டுத்துண்டு ஒன்னை மாட்டி எலிபொறியைக் கொண்டு வந்துவை. இன்னைக்கே செய்... இல்லேன்னா, எல்லா மூட்டையையும் கடிச்சுப் பாழாக்கிடும்! எனக் கனத்த குரலில் அதிகாரத்துடன் கூறினான், பதுக்கல் முதலாளி. மூட்டைகளின் அடியில ஒளிந்திருந்த எலிகள், இவர்களின் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்தன. முதலாளியும், கூலி ஆளும் வெளியே போனார்கள்.

சற்று நேரத்தில் திரும்பி வந்த கூலி ஆள், கருவாடு மாட்டிய எலிப்பொறியை மூட்டைகளின் அடியில் ஒரு மூலையில் வைத்துவிட்டுக் கிளம்பினான். கருவாட்டு வாசம் மூக்கைத் துளைத்தது. ஒரு எலி மற்றொரு எலியைப் பார்த்து, மூட்டையைக் கடித்து அரிசியைத் தின்ற நம்மைப் பிடிக்கத்தான் கருவாடு பொருத்திய எலிப்பொறி வைத்திருக்கிறார்கள். அவசரப்பட்டு நீ போய் அதில் மாட்டிக் கொள்ளாதே என்றது. அட... எத்தனை நாளைக்குத்தான் வெறும் அரிசியையே தின்பது?... கரு வாடு சுவையாக இருக்குமே! என்றது மற்றொரு சுட்டி எலி.வேண்டாம்... அது நம்மைப் பிடித்து அழிக்க மனிதன் செய்திருக்கும் சூழ்ச்சி. நீ போய் அதில் மாட்டிக் கொள்ளாதே! என்றது நட்பு எலி.

அதன் பேச்சைச் சட்டை செய்யாத சுட்டி எலி, அது அசந்த நேரத்தில் தாவிக் குதித்து ஓடி, கருவாடு பொருத்திய எலிப்பொறிக்குள் சென்று, கருவாட்டை நுகர்ந்து பார்த்தது. வாய் ஊறியது. சட்டென்று தன் கூரிய பல்லால் கருவாட்டுத் துண்டைப் பிடித்து இழுத்தது.டமார் என, பெரிய சத்தம். சுட்டி எலி உள்ளே மாட்டிக் கொண்டது. சத்தம் கேட்ட மற்றொரு எலி, நாம் சொன்னதைக் கேட்காமல் போய் மாட்டிக் கொண்டது சுட்டி எலி என்பதைப் புரிந்துகொண்டது. எலிப்பொறி இருக்கும் இடத்திற்கு மெதுவாகச் சென்று பார்த்தது.சுட்டி எலியோ, பொறிக்குள் மாட்டிய பிறகுதான் தான் செய்த தவற்றை உணர்ந்தது.

எப்படி வெளியே வருவது எனத் தெரியாமல் அந்தப் பெட்டிக்குள் இங்கும் அங்கும் தவிப்புடன் ஓடுவதும், கம்பி வழியே வெளியே எட்டிப் பார்ப்பதுமாக இருந்தது.

மற்றொரு எலி கம்பிக்கு அருகில் வருவது தெரியவும், சுட்டி எலி, என்னை எப்படியாவது காப்பாற்று... என்று பரிதாபமாய்க் கெஞ்சியது.நான்தான் அப்பவே சொன்னேனே... வேண்டாம்... ஆபத்து... போகாதேன்னு... நீ கேக்கல்லே. மாட் டிக்கிட்டே.... ஆயிரக்கணக்கான மூட்டைகளைப் பதுக்கி வைச்சு, அநியாயக் கலப்படம் செய்து அதிக விலைக்கு விற்பனை செய்யிற இந்த முதலாளி மாட்டிக்கிட்டா, அவருடைய செல்வாக்கு, மேலிடத் தொடர்பு இதையெல்லாம் பயன்படுத்தி உடனே வெளியே வந்துடுவாரு.ஆனா, வயித்துப் பசிக்காகக் கொஞ்சம் அரிசியத் தின்ன நீ மாட்டினா எப்படி வெளியே வர முடியும்? உனக்கு ஆசை காட்டி இந்தக் கூண்டுக்குள்ளே அடைச்சிருக்காங்க.

மூட்டையை ஓட்டை போட்டுத் தின்றது நீ செய்த சின்னத் தப்பு. அதுக்கு இவ்வளவு பெரிய தண்டனை. ஆனா... ஊரையே தேட்டை போட்டு, மூட்டை மூட்டையா பதுக்கி வச்சுக் கலப்படம் செய்து ஊரை ஏய்க்கிற பெரிய மனிதருக்கு யாரு தண்டனை கொடுப்பது? இப்படித்தான் மனிதர்கள் இருக்காங்க. இது புரியாம அவசரப்பட்டு வந்து மாட்டிக்கிட்டியே! நான் என்ன செய்ய முடியும்? நானும் உன்னை மாதிரி எலிதானே... உன்னை மீட்கிற பலம் எனக்கு இல்லையே! நாட்டை ஏய்க்கிற பெருச்சாளிகளுக்கு, நம்ம மாதிரி எலிகளைக் கொல்றது ரொம்பச் சுலபம். ஆனா, அவங்களை?... என்று அரற்றிக் கொண்டிருக்கும் போதே, கதவு திறக்கும் ஓசை கேட்டது.அச்சப்பட்டு வாழும் அவல மனிதர்களைப் போல். பேசிக் கொண்டிருந்த எலி பயந்து ஓடி ஒளிந்தது.

# பூமிக்கடியில் ஓர் அருவி




அருவி என்றாலே உயர மான மலைகளிலிருந்து பாய்ந் தோடி வருவதுதான் நம் நினைவுக்கு வரும். இந்த இதழின் 6 மற்றும் 7ஆம் பக்கங்களிலும் பார்த்து, படித்து மகிழ்ந்திருப்பீர்கள். பூமிக்கு அடியில் சுமார் 120 அடிக்குக் கீழே அருவி அமைந் துள்ளது என்றால் நம்ப முடிகிறதா? நம்பித்தான் ஆக வேண்டும்.

அமெரிக்காவின் டென்னஸி, சாட்டானோகா என்ற இடங்களின் அருகில் அமைந்துள்ள லுக்கவுட் மலைக் குகையில்தான் இந்த அருவி உள்ளது. இது ரூபி அருவி என அழைக்கப்படுகிறது. சுமார் 10 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் இங்குள்ள சுண்ணாம்புப் பாறைகள் உப்பு நீரினால் அரிக்கப்பட்டு மலையில் குகை உருவாகியுள்ளது.

இந்த அருவி இயற்கையாக குளிர்காலத்தில் ஏற்படும் மழை நீரின் காரணமாக உருவாகியிருக்கலாம் என நம்பப்படுகிறது. தண்ணீர் 145 அடி கீழ்நோக்கி விழுந்து குளமாக குகையின் நிலப்பரப்பில் சேர்கின்றது. பின்னர் அங்கிருந்து மலையின் வழியே ஓடி டென்னஸி ஆற்றைச் சென்றடைகிறது. சுமார் 30 மில்லியன் ஆண்டுகளாக இந்த அருவி இருப்பதாகக் கூறப்படுகிறது.லுக்அவுட் மலைக் குகையினை போல இல்லாமல் ரூபி அருவி குகைக்குச் செல்ல இருபதாம் நூற்றாண்டு வரை இயற்கையான வழியில்லாமல் இருந்துள்ளது. 1905ஆம் ஆண்டு நடைபெற்ற ரயில்வே சுரங்கப் பாதையின் கட்டுமானப் பணிக்காக லுக்அவுட் மலைக்குகையின் இயற்கைத் துளைகளும் மூடப்பட்டு விட்டன.

அந்தப் பகுதியில் வசித்து வந்த குகை ஆர்வலர் லியோ லாம்பெர்ட் என்பவரின் முயற்சியால் 1928ஆம் ஆண்டு நடைவழிப்பாதை அமைக்கும் பணி தொடங்கப்பட்டது. புதிதாக உருவாக்கிய நுழைவாயிலின் வழியே லாம்பெர்ட்டின் குழு உள்ளே சென்றது. வித்தியாசமான பாறை அமைப்புகளைப் பார்த்து வியப்படைந்து பாதையை விரிவுபடுத்தினர்.

அப்போதுதான் நம்ப முடியாத விசித்திர அருவியைப் பார்த்தனர். தாங்கள் பெற்ற மகிழ்ச்சியை மேலே வந்து பார்த்த மக்களிடம் சொல்லி மகிழ்ந்துள்ளனர்.

லுக்அவுட் மலைக்குகை மற்றும் அருவி இரண்டையும் பொதுமக்கள் பார்க்கும் வகையில் திறந்து வைத்தனர். லுக்அவுட் மலைக்குகை பொதுமக்களின் ஆர்வத்தை ஈர்க்காததால் 1935ஆம் ஆண்டு மூடப்பட்டது. அருவி பார்வையாளர்களின் கண்களுக்கும் மனதிற்கும் நிறைவைத் தந்ததால் சுற்றுலாத் தலமாகிவிட்டது.

குகையினுள் மின்சார விளக்குகள் அமைக்கப்பட்டு. உலகிலேயே மின்சார விளக்கு அமைக்கப்பட்ட முதல் குகை என்ற பெருமையையும் பெற்றுள்ளது. மேலும் மின்தூக்கி (Elevator) வசதியும் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# கொக்குவில் பொது நூலகத்தின் திருத்தப் பணிகள் எப்போது?

(திருநெல்வேலி)

கொக்குவில் பொது நூலகத்தின் திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்து பல மாதங்கள் கழிந்த நிலையிலும் இன்னமும் எந்தவொரு திருத்த வேலைகளும் செய் யப்படவில்லை என பொது மக்களினால் கவலை தெரிவிக் கப்பட்டுள்ளது.

பொது மக்கள் மற்றும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் மிக நவீன முறையில் இந் நூலகம் விரைவில் புனரமைக்கப்படும் எனபிரதேச சபைத் தலைவர் தெரிவித்திருந்தார்.

இந்நூலகத்தின் முன்பகுதி மாடிக் கட்டடமாக தொடங்கப் பட்டு அரைகுறையாகவுள்ளது. தொடர்ந்து 5 வருடங்களுக்கு மேலாகியும் இதன் வேலைகள் முடிந்தபாடாக இல்லை.

ஒப்பந்தகாரர்கள் வேலைகளைத் தொடங்குவதும் பின்னர் விட்டு விட்டு போவதும் வழக்கமாக இருந்து வருகிறது. பல தடவைகள் இதுபற்றி, பொது மக்களும் ஊடகங்களும் சுட்டிக்காட்டிய போதிலும் எது வித முனனேற்றமும் இதுவரை ஏற்படவில்லை எனத் தெரிவிக் கப்படுகிறது.

இந்நூலகத்திற்கு அண்மித்ததாக கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். பல்கலைக் கழகம், தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் பல தனியார் கல்வி நிலையங்கள் உள்ளன.

இவற்றில் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் இந்நூல் நிலையத்தைப் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

பல வருடங்களாக அரைகுறை வேலையுடன் முற்றுப் பெறாமல் இருள்சூழ்ந்தும், காற்றோட்டம் இல்லாமலும் காணப் படும் இந்த பொதுநூல கம் விரைவில் திருத்தப்பட்டு பொது மக்கள், மாணவர்கள் பயன்படுத் தும் நிலையில் செயற்பட வேண்டும் என்பது பலரது கோரிக் கையாகும். (137)

# பின்தங்கிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



மடு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட தம்பனைக்குளம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன

தம்பனைக்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்தலைவர் தங்கவேல் சுப்ரமணியம் அஜந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மன்னார் நகரசபை உறுப்பினர் ரட்ணசிங்கம் குமரேஸ், தம்பனைக் குளம் கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர் ஜேசுதாசன் வோல்டன், கிராம மாதர் அபிவிருத்திச்சங்கத்தலைவி செல்வராசா புஸ்பராணி, தம்பனைக்குளம் 'நியூஸ்டார்' விளையாட்டுக்கழக தலைவர் சிவலிங்கம் சிவகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். பிரான்ஸ் ரி.ஆர்.ரி வானொலி நேயர்களின் நிதிப் பங்களிப்புடன் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (160)

# இடையூறை ஏற்படுத்தும் கள் விற்பனை நிலையம்


## அகற்றுமாறு மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன் சந்திப் பகுதியிலுள்ள கள் விற்பனை நிலையத்தினை அகற்றுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மக்கள் கூடுகின்ற முக்கிய இடத்தில் இந்த கள் விற்பனை நிலையம் அமைந்துள்ளது. அக்கராயன் சந்தியிலிருந்து வன்னேரிக் குளம் செல்லும் வீதியில் அக்கராயன் கமநலசேவை நிலையத்திற்கு முன்பாக மக்கள் செறிந்துவாழும் பகுதியில் கள் விற்பனை நிலையம் அமைந்திருப்பதன் காரணமாக நிறைய பிணக்குகள் நாள்தோறும் ஏற்படுவதாகவும் குறித்த கள் விற்பனை நிலையத்தினை ஒதுக்குப்புறமான இடத்திற்கு மாற்றுமாறும் மக்களினால் கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

மேலும் அக்கராயன் கிளிநொசசியின் உபநகரம் என்பதன் காரணமாக வளர்ந்துவரும் நகரமொன்றின் மத்தியில் குறித்த விற்பனை நிலையம் இருப் பது பொருத்தமற்றதெனவும் மக்களினால் தெரிவிக்கப்படுன்றது. (160)



யாழ். சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் அதிபர் அ.கயிலாயபிள்ளையின் சேவை நயப்பும் பிரிவுபசார விழாவும் அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற போது..

# பதிவிருக்கப் பெட்டகம்

சவுதி அரேபிய மன்னர் அப்துல்லா 90 வயதில் இறந்துவிட்டார். துக்கம் கேட்பதற்காக இந்தியப் பயணத்தைப் பாதியில் முடித்துக்கொண்டு கிளம்பினார் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா.

வழக்கமாக அணியும் மேற்கத்திய ஆடையிலேயே இந்தியாவிலிருந்து கிளம்பினார் திருமதி மிஷேல் ஒபாமா. சவுதி அரேபிய மண்ணில் இறங்கியதும் அவரது உடை மாறிவிட்டது. முழுக்கப் போர்த்தப்பட்ட ஆடைக்கு மேலே, பெரிய அங்கி ஒன்றும் மாட்டியிருந்தார்.

அமெரிக்க அதிபரின் மனைவியாக இருந்தாலும் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுபவராக இருந்தாலும் பெண் என்பதால், தங்கள் நாட்டுக்கு ஏற்றபடி ஆடை அணியச் சொல்கிறது சவுதி அரேபியா. தங்கள் நாட்டு சட்டப்படிதான் வரவேண்டும் என்று சொன்னால் ஒபாமாவையும் ஷேக்குகள் அணியும் கஃபியாவை அணியச் சொல்லியிருக்க வேண்டும்.

ஆடை என்பது அவரவர் கலாச்சாரம், விருப்பம், வசதி சார்ந்த விஷயம். எந்த நாட்டினராக இருந்தாலும் அவர்களை அப்படியே ஏற்றுக்கொள்வதுதானே நியாயம். நாகரிகமும் கூட!

மிஷேலின் ஆடை மாற்றம் இது முதல் முறை அல்ல. வாட்டிகனில் போப்பாண்டவரைச் சந்தித்தபோது கறுப்பு ஆடையில் சென்றார். இந்தோனேஷியாவில் மசூதிக்குச் சென்றபோது முழுக்கப் போர்த்தப்பட்டு, தலையில் ஸ்கார்ஃப் அணிந்து சென்றார். செல்லும் இடங்களுக்கு ஏற்றவாறு பெண்கள் ஆடை மாற்றம் செய்துகொள்ள வேண்டிய சூழல் உலகம் முழுவதும் நிலவுகிறது. ஆனால் ஆண்கள் தங்கள் ஆடைகளிலேயே எந்த நாட்டுக்கும் எந்த இடத்துக்கும் சென்று வர முடிகிறது.

ஒரு நாட்டில் பின்பற்றப்பட்டு வரும் உடை சரியில்லை என்று இன்னொரு நாடு கருதினால், ஒட்டுமொத்தமாக அந்த நாட்டு மக்களை, அவர்கள் கலாச்சாரத்தை அவமானப்படுத்துவதாக இருக்காதா?

பெண்களை மனிதர்களாக மதிக்காமல் உடைமையாக, தங்கள் குடும்ப கௌரவமாக நினைப்பதால்தான் இப்படி இருக்க வேண்டும், அப்படி இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. பெண்கள் மீது நடத்தப்படும் பாலியல் வன்முறைகளுக்கு, பெண்களின் ஆடைகளே காரணம் என்று சொல்லி வருகின்றனர்.

இப்படிப் பெண்கள் மீது 'ஆடை' என்ற ஒரே விஷயத்தைப் பலவிதங்களில் பல்வேறு வடிவங்களில் திணிக்கும் சமூகச் சூழலை மாற்ற வேண்டிய கட்டாயம் பெண்களுக்கு இருக்கிறது. மிஷேலாக இருந்தாலும் சரி, சவுதி அரேபியப் பெண்களாக இருந்தாலும் சரி. உலகில் உள்ள எல்லாப் பெண்களுமே ஒரே இடத்தில்தான் நின்றுகொண்டிருக்கிறோம்.

– எஸ். சுஜாதா [தி இந்துவில்]

பலவீனம் மிகுந்த பெண்களை தங்கள் அதிகாரத்தின் வழி முற்றிலும் அடங்கி நடக்க வைக்க தேவையான சட்ட திட்டங்களை கண்டுபிடித்து செயறபடுத்துவதில் பெரும்பாலான நாடுகளில் கணவர்கள் எப்போதும் வெற்றி பெறுகிறார்கள்.

– எலிஸா ஃபே

ஒருவர் எந்த மதமாக இருந்தாலும் அவர் அதிகாரத்தில் இருக்கும் பட்சத்தில் அந்த மத அடையாளத்தை அவர் வெளிப்படுத்திக் கொள்வது சரியல்ல. பல்வேறு மதங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குப் போதிக்க வேண்டிய பொறுப்பில் ஒரு பேராசிரியர் மத அடையாளத்தை அணிந்திருந்தால் அதுவும் சரியானது அல்ல. பிரதம மந்திரியும் அப்படித்தான் இருக்க வேண்டும். நரேந்திர மோடி ஜப்பானியப் பிரதமரிடம் கீதையை அன்பளிப்பாகக் கொடுத்தது தவறு. கீதை இந்தியர்களின் பொது நூல் அல்ல. அதில் வெங்காயமும் பூண்டும் மாமிசமும் உண்பவன் கீழானவன், ஈனப் பிறவி என்ற கருத்து ஆணித்தரமாக பல இடங்களில் வருகிறது. 16, 17–ஆவது அத்தியாயங்கள் முழுக்கவும் அதுதான். 16–ஆவது அத்தியாயத்தில் எட்டாவது சூத்திரம் மிகவும் சுவாரசியமானது. 'உலகத்தைக் கடவுள் படைக்கவில்லை; காமஹேதுகத்தினாலேயே உண்டானது; அதாவது ஆண் பெண் காமத்திலிருந்தே உண்டானது என்பவர்கள் அசுரர்கள்' என்கிறது அந்த சூத்திரம். இப்படிப்பட்ட நூல் எப்படி பொது நூலாக இருக்க முடியும்? எனக்குத் தெரிந்து திருக்குறளில் மட்டும்தான் மத வேறுபாடுகள் இல்லை. ஆனால் அதிலும் ஆணை விட பெண் கீழானவள் என்ற கருத்து பல இடங்களில் வருகிறது. எனவே இக்காலத்துக்கேற்ற பொது நூல் என்றெல்லாம் எதையும் சொல்ல முடியாது.

–சாரு நிவேதிதா

# முப்படையினருக்கு பொலிஸ் அதிகாரம்

# வர்த்தமானியை வாபஸ் பெறுக

## ஜனாதிபதியிடம் சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

முப்படையினருக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்கும் வகையிலான அதி விசேட வர்த்தமானி அறிவித்தலை நீடிக்கும் நடவடிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டுமென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் கடந்த அரசாங்கம் மாதாந்தம் இந்த அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் காலத்தை நீடித்து வந்தது. பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய முப்படையினரை அழைக் கவும் அவர்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்கவும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் அவகாசம் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய சூழ்நிலையை கருத்திற்கொண்டு இந்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும்.


கடந்த 2 ஆம் திகதி இந்த வர்த்தமானி அறிவித்தலின் காலத்தை ஒரு மாதத்திற்கு நீடிக்கும் உத்தரவில் ஜனாதிபதி கையொப்பமிட்டிருந்தார்.

இந்த வர்த்தமானி அறிவித்தலை நீடிப்பதற்கான சட்டத்தேவைகள் கிடையாது என சட்டத்தரணிக்ள சங்கம் தெரிவித்துள்ளது.

அவசரகாலச் சட்டம் இரத்து செய்யப்பட்டதன் பின்னர், அந்தச் சட்டத்திற்கு நிகராக கடந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ இவ்வாறு அதி விசேட வர்த்த மானி அறிவித்தலின் மூலம் பொலிஸ் அதிகாரங்களை முப்படையினருக்கு வழங்கியிருந்தார்.

பொதுமக்கள் போராட்டங்கள் கிளர்ச்சிகள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும்போது அவற்றை அடக்குவதற்கு இந்த வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக முப்படையினரை அழைக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசுக்கு சொந்தமான ஜீப் வாகனம் கண்டுபிடிப்பு



அரசாங்கத்துக்கு சொந்தமான ப்ராடோ ரக ஜீப்வாகனமொன்று காலியிலுள்ள வாகன திருத்துமிடத்திலிருந்து கைப்பற்றபபட்டுள்ளது.

இந்த வாகனம் கடந்த அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமாக விருந்தது என உறுதி செய்யப்பட்டுளளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் சட்டவிரோதமான முறையில் இந்த வாகனம் ஈடுபடுத்தப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிடடுள்ளனர். விபத்துக்குள்ளான நிலையிலேயே குறித்த வாகனம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இந்த வாகனத்தை வாகனத் திருத்துமிடத்திற்கு கொண்டுவந்தவர் மற்றும் தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்தியவர்கள் தொடர்பில் விசாரணைகள ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், விசாரணைகளையடுத்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# எனது மகன் விமுக்தி அரசியலுக்கு வரார்

## ' கூறுகிறார் சந்திரிக்கா

(கொழும்பு)

எனது மகன் எந்த விதத்திலும் அரசியலுக்கு வர மாட்டார் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் புதல்வர் விமுக்தி குமாரதுங்க அரசியலுக்கு வர விருப்பதாக செய்திகள் வெளியாகி இருந்த நிலையில், அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியை உறுதிப்படுத்த அர்ப்பணிப்புகளை மேற்கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாட்டாளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், கட்டுகஸ்தோட்டையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவம் ஒன்றில் பேசும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வைபவத்தில் கலந்து கொண்ட ஒருவர், முன்னாள் ஜனாதிபதியின் புதல்வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடாக அரசியலுக்கு கொண்டு வருமாறும் அது அனைவரதும் எதிர்ப்பார்ப்பும் எனவும் கூறியுள்ளார்.

வைபவத்தில் கலந்து கொண்ட அனைவரும் இதனை வரவேற்றதுடன் சில நிமிடங்கள் கரகோஷமும் செய்தனர்.

இதன் பின்னர் உரையாற்றிய சந்திரிக்கா, விமுக்தி எந்த வகையிலும் அரசியலுக்கு வரபபோவதில்லை என தெரிவித்துள்ளார்.

# பொதுத் தேர்தலின் பின்னர் சுதந்திரக்கட்சி அரசாங்கம்

## எதிர்க்கட்சித் தலைவர் சபதம்



எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின்போது தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடித்து சுதந்தி ரக் கட்சி சார்பான புதிய அரசாங்கத்தை உருவாக்குவோம் என்று, எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா சபதம் வெளியிட்டுள்ளார்

நாடாளுமன்றத் தேர்தல் குறித்து விவாதிக்க எதிர்வரும் 14 ஆம் திகதி சுதந்திரக்கட்சி செயற்குழு கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருக்கத்தக்கதாக, சுதந்திரக்கட்சி சார்ந்து பிரதமரை தேர்தலின் பின் நாம் நியமிப்போம் என்றார்.

சுதந்திரக்கட்சி மீது திணிக்கப்படும் சதி முயற்சிகள், சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராய்ந்து அவற்றை தோற்கடித்து எதிர்காலத்தில் திறமையாக கட்சியை கொண்டுசெல்லவும் நடவடிக்கை எடுக்கப்படும். ஐ.தே.க. உறுப்பினரான ஹரின் பெர்னாண்டோ, ஊவா மாகாண முதலமைச்சராக நியமிக்கப்பட்டபோது அதற்கு ஆதரவு வழங்கிய சுதந்திரக்கட்சி சார்ந்தவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

சரியான சட்டச் செயன்முறை மூலம் கட்சிக்குள் இருப்பவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்கள் கட்சியைவிட்டு நீக்கப்படுவர். கடந்த ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்தில் எனக்கும் கூட சரியான அந்தஸ்து தரப்படவில்லை.

ஆனாலும் நான் கட்சியை விட்டு ஓடிவிடவில்லை. எந்தப் பதவி என்றாலும் கட்சிக்காக தொடர்ந்து போராடுவதே சிறந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

# ஜெனிவா தீர்மானத்தை பிற்போட பயணத்தை ஆரம்பித்த மங்கள



(கொழும்பு)

வெளிநாடுகளுடன் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தவும், ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைப் பிற்போடுவதற்கு ஆதரவு திரட்டவும், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, தொடர் வெளிநாட்டுப் பயணங்களை ஆரம்பித்துள்ளார்.

பிரித்தானியாவுக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் காலை லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அவர் லண்டனில் பிரித்தானியாவின் உயர் மட்ட அரசாங்கத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தவுள்ளார்.

லண்டன் பயணத்தை முடித்துக் கொண்டு அவர், இந்த வார இறுதியில், அமெரிக்கா செல்வார்.

வரும் வியாழக்கிழமை அவர் வொஷிங்டனில் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியை சந்தித்துப் பேச்சு நடாத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்பை அடுத்து, வொஷிங்டனில் தேசிய ஊடக கழகத்தில், நடைபெறும் வரவேற்பில் கலந்துகொள்ளும் மங்கள சமரவீர, இலங்கை அமெரிக்க உறவுகள் குறித்தும், சிறப்புரை நிகழ்த்தவுள்ளார்.

அமெரிக்கப் பயணத்தை முடித்துக் கொண்டு, மங்கள சமரவீர நேரடியாக புதுடில்லி செல்வார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வரும் 15 ஆம் நாள், இந்தியாவுக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன், அவர் புதுடில்லியில் இணைந்து கொள்வார். இந்தியப் பயணத்தின் பின்னர், இந்த மாத இறுதியில், சீனாவுக்குச் செல்லவும் மங்கள சமரவீர திட்டமிட்டுள்ளார்.

# நாட்டின் எதிர்காலம் குறித்தே அனைவரும் சிந்திக்கவேண்டும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

கட்சி அரசியலின்றி, நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்திக்க வேண்டும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் பட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு தெமட்டகொடையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.



இந்தக் கட்சி முறை என்பது இந்த நாட்டிலிருக்கும் பாரிய புற்றுநோயாகும். இந்தக் கட்சி முறைமையினால் நாம் பாரிய நெருக்கடிகளை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, யு.என்.பி, ஜே.வி.பி. என பிரிந்து பிரிந்து நாம் செல்ல வேண்டி ஏற்பட்டது. இந்த கட்சி முறைமையை ஒருபுறம் வைத்துவிட்டு, நாட்டின் எதிர்காலத்திற்காக செயற்பட வேண்டிய இயலுமை எமக்கு ஏற்பட வேண்டும். ஊழல், மோசடி, பலாத்காரம் இல்லாத நாடொன்றைக் கட்டியெழுப்பவே இன்று எதிர்பார்க்கப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசியலுக்கன்றி மக்களுக்காக சேவையாற்ற முன்வரவேண்டும்

## அழைப்பு விடுக்கின்றார் ரவி



அரசியலுக்கு சேவையாற்றாமல் நாட்டு மக்களுக்காகவே சேவையாற்ற வேண்டுமென ஐ.தே.க.வின் உப தலைவரும் நிதி அமைச்சருமான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சொய்சாபுர அலுவலகத்தை திறந்து வைப்பதற்காகவும் உறுபபினர்களை தெரிவு செய்வதற்காகவும் நேற்று முன்தினம் நடந்த நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, தற்போது நாட்டு மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமே தவிர அரசியலுக்கு சேவையாற்ற வேண்டியதில்லை.

இந்த அதிகாரத்தை சர்வாதிகார ஆட்சியில் இருந்து பெரும் சிரமத்திற்கு மத்தியில் பெற்றுக் கொண்டது மக்களுக்கு சேவையாற்றுவதற்கே. இதில் சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைத்து இன மக்களும் உள்ளனர். எதிர்வரும் பொதுத் தேர்தல் ஒக்ரோபர் மாதத்திற்கு முன்னர் இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(40) ஒரு போத்தலில் நிரப்படத்தக்க சோடாவின் கனவளவு 125 மில்லிலீற்றர் ஆகும். அத்தகைய 9 போத்தல்களைக் கொண்டு முற்றாக நிரப்பப்பட்ட பெரிய பாத்திரத்தின் கனவளவு யாது?

.............................................................

(41) 300m நீளமான கம்பி ஒன்றில் 250cm இடைவெளிக்கு ஒன்றாக அலங்கார மின்விளக்குகள் தொங்கவிடப்பட்டுள்ளன தொங்கவிடப்பட்ட மின்விளக்குகள் எத்தனை?

.............................................................

(42) அண்ணனிடம் உள்ள பணம் தம்பியிடம் உள்ள பணத்திலும் ரூபா 15 குறைவாகும். இருவரிடமும் உள்ள பணத்தின் மொத்தத்தொகை ரூபா 95 ஆகும். அண்ணனிடம் உள்ள பணம் எவ்வளவு?

.............................................................

(43) மாலதியிடம் உள்ள பணத்தின் அரைப்பங்கு ஆகிய 450ரூபாவை விமலாவிற்கு கொடுத்த போது அது அனுலாவிடம் உள்ள பணத்தைவிட 75ரூபா கூடியதானது. மூவரிடமும் உள்ள மொத்தப்பணம் எவ்வளவு?

.............................................................

(44) ரூபா 15இற்கு 20 கொய்யாப்பழங்கள் வாங்கலாம். 35 கொய்யாப்பழங்கள் வாங்குவதற்கு எவ்வளவு பணம் வேண்டும்?

.............................................................

(45) செவ்வகத்தின் நீளம் அதன் அகலத்தைப் போன்று மும்மடங்காகும். செவ்வகத்தின் சுற்றளவுக்கு சமமான சதுரம் ஒன்று உள்ளது. செவ்வகத்தின் நீளம் 12cm எனின் சதுரத்தின் ஒரு பக்க அளவு என்ன?

.............................................................

(46) ஒரு பூனை இருக்கும் இடத்தில் இருந்து ஒரு மீற்றர் தூரத்தில் ஒரு எலி இருக்கிறது. பூனை செக்கனில் 50cm ஓடும். எலி ஒரு செக்கனில் 15cm கொண்ட மூன்று பாய்ச்சல் பாயும், பூனை எலியைப் பிடிக்க எவ்வளவு நேரம் எடுக்கும்

.............................................................

(47) ஒரு உடைந்த கடிகாரம் 30 நிமிடங்களுக்கு ஒருமுறை மணி அடிக்கும். முதலாவது தடவையாக மு.ப.7.30 க்கு மணி அடித்தது. அது 9ஆவது தடவை மணி அடிக்கும் போது நேரம் யாது?

.............................................................

(48) வீட்டில் இருந்து 1km தூரத்தில் உள்ள பாடசாலைக்குப் போய் வர 20 நிமிடம் எடுக்கும் எனின் 4km தூரத்தில் உள்ள புகையிரத நிலையத்துக்கு போவதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்?

.............................................................

(49) கடை ஒன்றில் இருந்த நல்ல முட்டைகளின் எண்ணிக்கை 113 ஆகும். அங்கிருந்த தேங்காய்களின் எண்ணிக்கையானது முட்டைகளின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் 105 அதிகமாகும். அங்கிருந்த முட்டைகளில் பழுதடைந்த முட்டைகளின் எண்ணிக்கையானது. தேங்காய்களின் எண்ணிக்கையை பார்க்கிலும் 56 குறைவாகும். கடையில் உள்ள நல்ல முட்டைகளினதும் தேங்காய்களினதும் எண்ணிக்கை யாது?

.............................................................

(50) 9m நீளமுள்ள ஒரு நாடாவில் இருந்து 30cm நீளமான 9 துண்டுகள் வெட்டப்பட்டால் எஞ்சியுள்ள நாடாவின் நீளம் யாது?

.............................................................

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

01. (1).2 (2).1 (3).1 (4).2 (5).3 (6).3 (7).3 (8).2 (9).3 (10).3 (11).1 (12).1 (13).1 (14).2 (15).3 (16).3 (17).2 (18).2 (19).2 (20).1

02. (1).86 (2).93 (3).99 (4).510 03. (1).சதீஸ் (2).அபி (3).ரவி,அபி 04. (1).786 (2).981 (3).824

05. (1).40 (2).6 (3).தரம்-04 06. (1).8 (2).2 (3).14 (4).900 (5).112 (6).32 (7).74,80 (8).7மணி 30நிமிடம் (9).953 (10).6 (11).90ரூபா (12).183 07. (1).1 (2).1 (3).3 (4).3 (5).2 (6).1 (7).1 (8).2 (9).3 (10).2 (11).1 (12).1 (13).3 (14).3 (15).3 (16).3 (17).1 (18).3 (19).2




## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 15 நிமிடம்




# கல்வி முரசு

1 தொடக்கம் 49 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் எழுதுக

(01)  இவ்வுருவில் சிறிய சதுரம் ஒன்றின் ஒருபக்க நீளம் 2cm எனின் இப்பெரிய சதுரத்தின் பரப்பளவு யாது?

.............................................................


(02)  இவ்வுருவினுள் இது போன்ற இன்னும் எத்தனை வட்டங்கள் வரையலாம்?

.............................................................

(03) சுஜி மாலை நேர வகுப்புக்கு வீட்டை விட்டு சென்று கொண்டிருக்கையில் அவளின் நிழல் வலப்பக்கம் விழுவதைக் கண்டாள். எனின் சுஜி எத்திசையை நோக்கிச் சென்றிருப்பாள்?

.............................................................


(04) வழங்கப்பட்ட சதுரக்கோட்டுப்படம் சமபகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது




இதில் 0.8 பகுதியை நிழற்ற வேண்டுமானால் இன்னும் எத்தனை அரைத்துண்டுகளை நிழற்ற வேண்டும்?

.............................................................

(05) கடிகாரம் A யின் முகத்தில் காணப்படும் நேரத்தை கடிகாரம் B யின் முகத்தின் மீது காட்டும் வகையில் மணித்தியால முள்ளையும், நிமிட முள்ளையும் வரைந்து காட்டுக




A



B


(06) 3000 ரூபாவில் $\frac{3}{4}$ பங்கு, 1000 ரூபாவில் $\frac{1}{4}$ பங்கிலும் எவ்வளவு ரூபா கூடுதலானது? ..............

(07) 23990 ஐச் சொற்களில் எழுதுக ..............

(08) ஒருவன் தன்னிடமிருந்த இனிப்புக்களைத் தனது பிள்ளைகளுக்கு மும்மூன்றாகக் கொடுத்த போது ஒன்று எஞ்சியது. இவ்விரண்டாக கொடுப்பானானால் ஆறு எஞ்சும் எனின், அவனுக்கு எத்தனை பிள்ளைகள்? ..............

(09) $1\frac{1}{4}$ kg கருவாட்டுப்பையில் 50g நிறையுள்ள எத்தனை பைகள் இருக்கும் ..............

(10) அருகில் உள்ள உருவில் நிழற்றப்பட்ட பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக ..............




(11) 6 எலுமிச்சம்பழங்களில் 250ml குளிர்பானம் பெறலாம். 2லீற்றர் குளிர்பானம் பெற எத்தனை எலுமிச்சம் பழங்கள் தேவை? ..............

(12) கீழுள்ள இரு கோணங்களின் பெயர்களையும் எழுதுக




.............. ..............


(13) ஒரு பண்ணையில் உள்ள விலங்குகள் பற்றிய விபரம் கீழே வரைபில் காட்டப்பட்டுள்ளன




(i) பண்ணையில் உள்ள மொத்த விலங்கினங்களின் எண்ணிக்கை யாது? ..........................


(ii) பண்ணையில் உள்ள கோழிகளினதும் வாத்துக் களினதும் கால்களின் எண்ணிக்கை யாது? ..........................

(14) செவ்வகம் ஒன்று சமமான பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுச் சில பகுதிகளுக்கு நிறந்திட்டப்பட்டுள்ளது. நிறந்திட்டிய பின்னர் எஞ்சியிருக்கும் பகுதிகளின் எண்ணிக்கை செவ்வகத்தின் என்ன பின்னமாகும்?




(..........................)

(15)





ஒரு பூம்பாத்தியின் வடிவம் எதிரே உள்ள உருவில் காட்டப்பட்டுள்ளது. இதன் சுற்றளவு யாது? (..........................)



(16) உருவில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு பெரிய சதுரத்தகட்டுத்துண்டில் சிறிய சதுரங்கள் சில வரையப்பட்டுள்ளன. ஒரு சிறிய சதுரத்தின் பரப்பளவு $2cm^2$ எனின் பெரிய சதுரத்தின் பரப்பளவு யாது? (..........................)

(17) வழங்கப்பட்ட சதுரக்கோட்டுபடம் சம பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது




இதில் நிறந்திட்டப்பட்ட கட்டத்தை முழுவதின் பின்னமாக எழுதுக (..........................)

(18) கடிகாரம் A இன் முகத்தில் காணப்படும் நேரத்தைக் கடிகாரம் B யின் முகத்தில் மீது காட்டும் வகையில் மணித்தியால முள்ளையும், நிமிட முள்ளையும் வரைந்து காட்டுக




(19) ஓர் ஆரம்ப பாடசாலைக்கு பிள்ளைகள் வரும் வாகனங்கள் பற்றிய தகவல்கள் வரைபில் காணப்படுகின்றன





(i) வானிலும் முச்சக்கரவண்டியிலும் வரும் மாணவர் களின் எண்ணிக்கைகளுக்கிடையே உள்ள வித்தியா சம் யாது? ..........................

(ii) வேறு விதங்களில் வரும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 55 என காணப்பட்டுள்ளது. அந்த எண்ணிக்கையை வரைபில் உரிய நிரலில் குறித்து, நிரலை நிழற்றுக ..........................


(20) A,B என்னும் பாத்திரங்களில் இருக்கும் நீர்க்கனவளவு களுக்கிடையே உள்ள வித்தியாசம் எத்தனை மில்லிலீற்றர்?

..........................ml







(21) காட்டப்பட்டுள்ள உருவின் சுற்றளவு யாது?




(..........................)

(22) வழங்கப்பட்டுள்ள சதுரக்கோட்டுப்படம் சம பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதன் மொத்தப் பரப்பளவில் 0.3 பகுதியை நிழற்றுக




(23) ரூ.47.00 விலையுள்ள ஒரு பயிற்சிப் புத்தகத்தையும், ரூ.12.50 விலையுள்ள பேனையையும் வாங்குவதற்கு என்னிடம் ரூ.50.00 உள்ளது. மேலும் எவ்வளவு பணத் தேவைப்படும்? ..........................

(24) 420 மாம்பழங்கள் நான்கு பெட்டிகளில் சமமாக அடுக்கப்பட்டன. ஒரு பெட்டியில் உள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது? ..........................


(25) ஒரு போத்தலில் உள்ள கனவளவு 750ml ஆகும். இத்தகைய 9 போத்தல்களில் உள்ள நீரின் கனவளவு யாது? ..........................

(26) கீழே காணப்படும் கடிகாரத்தின் நேரமானது 45 நிமிடங்கள் கூடுதலாகச் செல்கின்றது. எனின், 22.50 ஆக இருக்கும் போது இதன் உண்மை நேரம் என்ன?




..........................

(27) அருகில் உள்ள உருவின் சுற்றளவு யாது?
..........................cm





(28) 250g சீனியின் விலை 10.50 ரூபா எனின் 1kg 250g சீனியின் விலை யாது? ..........................

(29) 9cm நீளமான கயிற்றில் சீதா 3m 250cm நீளமான கயிற்றையும் ராதா 1m 50cm நீளமான கயிற்றையும் எடுத்தார்கள். எனின், எஞ்சிய கயிற்றின் நீளம் யாது? ..........................

(30) 25 x 8 x 0 x + 10 - 2 = ..........................

(31) உருவில் நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பின்னமாகும். ..........................



(32) 850ml, 1400ml ஆவதற்கு இன்னும் எத்தனை ml தேவை? ..........................

(33) மாலாவின் வயது சீலாவின் வயதைவிட 3 வருடங்கள் கூடுதலாகும். சீலாவின் வயது கலாவின் வயதைவிட 4 குறைவாகும். கலாவின் வயது 20 வருடங்கள் ஆயின் மாலாவின் வயது எத்தனை வருடங்கள்? ..........................

(34) கீழுள்ள எண்ணுக்கு இரண்டு சமவலுப்பின்னங்களை எழுதுக $\frac{4}{6}$ = ..........................


(35) $2\frac{1}{2}$ kg சீனியை 100g பைக்கற் ஆக எத்தனை பைக்கற்றில் அடைக்கலாம்? ..........................

(36) ஒரு வீதியில் பத்து தந்திக்கம்பங்கள் உள்ளன. அவற்றில் இரு கம்பங்களுக்கிடையில் உள்ள தூரம் 10m எனின் அக்கம்பங்களுக்கிடையில் உள்ள மொத்ததூரம் யாது? ..........................

(37) மாணவன் ஒருவன் 10 நிமிடங்களில் 4km தூரம் பயணஞ் செய்து முதலாவது இடத்தைப் பிடித்தான். அவன் 1 மணித்தியாலம் 15 நிமிடங்களில் செல்லக்கூடிய தூரம் என்ன? ..........................

(38) மாலா ஒரு நாளைக்கு 4மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை இரண்டு தேக்கரண்டிகள் வீதம் மருந்து குடிப்பாள். ஒரு வாரத்தில் அவள் குடிக்கும் மருந்து எத்தனை தேக்கரண்டி? ..........................

(39) கழிக்குக $\frac{1}{8} - \frac{1}{2}$ = ..........................





பண்ணை ஊர்காவற்றுறை வீதியில் பண்ணைக்கும் மண்டைதீவு சந்திக்கும் இடையில் சிறுத்தீவிற்கு மேற்காக நடைபெற்று வரும் வீதி புனரமைப்புப் பணிகளின் போது புதிய பாலமொன்று நவீன முறையில் நிர்மாணிக்கப்பட்டு பணிகள் பூர்த்தியடையும் நிலையை அடைந் திருப்பதைக் காணலாம். (பா)

# சமாதானத்தின் உண்மையான பிரதிபலனுக்கு ஒற்றுமையாக செயற்படுவதே சிறந்தது

## வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு



(கொழும்பு)

ஒவ்வொருவரையும் அன்பாகவும் நட்பாகவும் பாசத்துடனும் பார்ப்பதன் மூலம் எமது நாட்டில் சமாதானத்தின் உண்மையான பிரதி ப்லன்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

அதற்குத் தடையாகவுள்ள காரணிகள் குறித்து ஆழமாக ஆராய்ந்து செயற்படுவது எமது முக்கிய கடமையாகும் என வடமாகாணத்தின் புதிய ஆளுநர் எச்.எம்.பி.எஸ்.பளிகக்கார தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கும் ஆளுநர் பளிகக்கார யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் கடந்த 02 ஆம் திகதி தமது கடமைகளைப் பொறுப் பேற்றார்.

அச்சமயம் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். வடமாகாணத்தின் புதிய ஆளுநரின் பதவியேற்பு வைபவத்தில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரனும் பங்குபற்றினார்.

இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், வட மாகாணத்தில் வாழும் மக்களின் தேவைகளையும், அவர்களது எண்ணங்களையும் சரியான முறையில் அடையாளம் காண வேண்டும்.

நீண்டகாலமாகப் பல தரப்புக்களுடனும் செயற்பட்ட இவர்களது பிரச்சினைகளுக்கு அறிவு ரீதியாகவும், உளரீதியாகவும் தீர்வைப் பெற்றுக்கொடுக்க நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நாம் எப்போதும் ஒவ்வொருவரையும் அன்பாகவும், நட்பாகவும் பாசத்துடனும் பார்க்க வேண்டும். இந்நாட்டில் நாமெல்லோரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக செயற்படல் அவசியம். சமாதானத்தின் உண்மையான பிரதிபலன்களைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

அதற்குத் தடையாக அமைந்துள்ள காரணிகள் குறித்து ஆழமாக ஆராய்வது உகர்ந்தது.

நாம் சர்வசமய சக வாழ்வு, வேலைத் திட்டங்கள், கலாசார பரிமாற்றங்கள் என்பவற்றின் ஊடாக மக்களின் உள்ளங்களை சீரமைக்க வேண்டும். உடைந்த உள்ளங்களை ஆற்றுப்படுத்த வேண்டும்.

இதற்குத் தேவையான வழிகாட்டல்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட தற்போதைய அரசாங்கத்திலுள்ள அனைவரும் வழங்குகின்றனர். நாம் எல்லோரும் ஒன்றுபட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

ஆளுநர் கடமைகளைப் பொறுப் பெடுத்ததைத் தொடர்நது முதலமைச்சருடனும் கலந்துரையாடினார்.

# சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுவோருக்கு ஆயுள் தண்டனை



(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்களுக்கு ஆயுள்தண்டனை வழங்கும் வகையில் சட்டங்களை கடுமையாக்கவுள்ளதாக சிறுவர் விவகார இராஜங்க அமைச்சர் ரோசி சேனாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் நீதி அமைச்சர் மற்றும் பிரதி நீதியமைச்சர் ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

சிறுவர்களை முறையாக பராமரித்து அவர்களது உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு பதிலாக இன்று நாட்டில் காணப்படும் நிலைமை கவலையளிப்பதாகவும் அவர் கூறியுள்ளார். சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் பிணையில் விடுவிக்கப்படுவதை தடுக்கும் வகையில் சட்டதிருத்தம் கொண்டு வரப்படவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் ரோசி சேனாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# தாதியர் சேவையில் உயர்மட்ட பதவிகள் ஊழலில் ஈடுபடும் சுகாதார அமைச்சு

## இலங்கை தாதியர் சங்கம் குற்றச்சாட்டு


தாதியர் சேவையின் உயர்மட்ட பதவிகள் சில தொழிற்சங்க தலைவர்களின் தேவைக்கேற்ப நியமிக்கும் செயற்பாட்டில் சுகாதார அமைச்சு ஈடுபட்டுள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கம் குற்றம்சுமத்தியுள்ளது.

சுகாதார அமைச்சின் தாதியர் பணிப்பாளர், மருத்துவமனை சேவையாளர் பதவிகளும் தொழிற் சங்க தலைவர்களின் வேண்டுதல்களுக்கு அமைவாக நியமிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் காமினி குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இந்த குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

கொழும்பு தேசிய மருத்துவமனையிலும் விசேட தரங்களைக் கொண்ட பிரதான தாதிய அதிகாரிகளுக்கான பதவிகளை வழங்கிய சந்தர்ப்பங்களிலும், இவ்வாறான முறைகேடான நிலையே ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

# பாடசாலை மாணவர்களுக்கு கல்விக்கான உதவி வழங்கல்



யாழ். மாவட்ட படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் 2014 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு கல்விக்கான ஊக்குவிப்புத் தொகை வழங்கும் நிகழ்வொன்று யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

51, 52 மற்றும் 55 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ் மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இந்த உதவித் தொகையை மாணவர்களுக்கு வழங்கி வைத்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து 2014 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுள் ஒவ்வொரு பிரதேச செயலகர் பிரிவுகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 480 மாணவர்களுக்கு ரூபா 750 வைப்பிலிடப்பட்ட வங்கிப்புத்தகம் வழங்கப்பட்டது.

இதேபோல் தொடர்ந்து 12 மாதங்களுக்கு 750 ரூபா வீதம் வைப்பிலிடப்படும் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. சர்வ மத தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# விலைக்குறைப்பு செய்யாத வர்த்தகர்கள் மீது சட்டம் பாயும்

(கொழும்பு)

இடைக்கால வரவு செலவுத் திட்டத்தினால் மக்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை வழங்க மறுக்கும் வியாபார நிலையங்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துமாறு கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் ரிஷாட் பதியுதீன் நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் கேட்டுள்ளார்.

அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையில் பொருட்களை வழங்காத நிறுவனங்கள் குறித்து முறைப்பாடுகளை தெரிவிப்பதற்கு 1977 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அமைச்சர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# அதிக விலையில் பொருட்கள் விற்பனை 1,500 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன

## நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பு தகவல்

(கொழும்பு)

அதிக விலையில் பொருட்கள் விற்கப்பட்டமை குறித்து 1,500 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பு தெரிவித்துள்ளது.

நிர்ணய விலையை விட கூடுதல் விலைக்கு மண்ணெண்ணெய் விற்கப்படுகின்றமை தொடர்பிலேயே அதிகளவு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அந்த அமைப்பின் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே அதிகளவான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன

கொழும்பு புறக்கோட்டை பகுதியிலுள்ள உணவகங்களில் தேநீர், அப்பம் என்பன அதிக விலைக்கு விற்கப்படுவது தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை வரவு செலவுத் திட்ட நிவாரணங்களை நுகர்வோருக்கு வழங்காத வர்த்தகர்களை கண்டறியும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாடுமுழுவதும் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஜே.ஏ.எம்.டக்ளஸ் குறிப்பிட்டுள்ளார்.

# உக்ரைனுக்கு ஆயுத உதவி
# தீவிர ஆலோசனையில் அமெரிக்கா



(முனீச்)

ரஷ்யாவின் தாக்குதலை சமாளிக்கவும், தங்கள் நாட்டை தற்காத்துக் கொள்ளவும் உக்ரைனுக்கு உரிமை உள்ளது. உக்ரைன் பிரச்சினை சமாதான முறையில் தீர்க்கப்பட வேண்டும். எனினும், உக்ரைன் தற்காத்துக் கொள்ளத் தேவையான உதவிகளை அளிக்க அமெரிக்கா ஆலோசிக்கும் என்று அமெரிக்காவின் துணை அதிபர் ஜோ பிடன் உறுதி கூறினார். உக்ரைன் பிரச்சினை தொடர்பாக ஜேர்மனியின் தலைநகர் முனீச் நகரில் நேற்று முன்தினம் பாதுகாப்பு ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமெரிக்க துணை அதிபர் ஜோ பிடன், ஜேர்மன் அதிபர் ஏஞ்சலா மெரகல் மற்றும் பிரான்ஸ் அதிபர் பிராங்காயிஸ் ஹோலன்டே ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்பின்னர் அமெரிக்க துணை அதிபர் ஜோ பிடன் கூறியதாவது: உக்ரைன் பிரச்சினை சமாதான முறையில் தீர்க்கப்பட வேண்டும். அங்குள்ள மக்களை பாதுகாப்பதில் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நானும் அதிபர் ஒபாமாவும் விரும்புகிறோம். இதுதொடர்பாகவே ஜேர்மன் மற்றும் பிரான்ஸ் அதிபர்களுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது. ரஷ்ய அதிபர் புடின் பலமுறை சமாதான பேச்சுவார்த்தை நடாத்துவதாக அறிவித்தாலும், உக்ரைனில் உள்ள பிரிவினைவாத குழுக்களுக்கு ஆயுதங்களை விநியோகித்து வருவதாக உக்ரைன் அரசு குற்றம் சாட்டுகிறது.

இந்நிலையில், உக்ரைன் நாட்டின் மக்களைக் காக்கவும், தற்காத்துக்கொள்ளவும் அந்நாட்டு அரசு அமெரிக்காவிடம் ஆயுத உதவி கேட்கிறது. ஒருபக்கம் சமாதான பேச்சுவார்த்தை நடைபெற்றாலும், உக்ரைன் தன்னை தற்காத்துக்கொள்ள உரிமை இருக்கிறது. அந்நாட்டுக்கு ஆயுத உதவி செய்வது குறித்து ஆலோசிக்கப்படுகிறது என்று ஜோ பிடன் கூறினார்.

# காஷ்மீர் எல்லைப் பகுதியில் பாக். இராணுவம் தாக்குதல்



(ஆர்.எஸ்.புரா)

ஜம்மு காஷ்மீர் எல்லைப்பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி நடாத்திய தாக்குதலால் பதற்றம் நிலவி வருகிறது. ஜம்மு காஷ்மீரில் ஆர்.எஸ்.புரா பகுதியில் இந்திய இராணுவத்தினர் பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு இருந்தனர். அப்போது 8 பாதுகாப்பு நிலைகள் மீது குறிவைத்து பாகிஸ்தான் இராணுவம் துப்பாக்கிச் சூடு நடாத்தியது. இதற்கு இந்திய இராணுவத்தினரும் தக்க பதிலடி அளித்தனர்.

இரு தரப்பிற்கும் இடையே சுமார் 3 மணி நேரம் கடும் துப்பாக்கிச் சண்டை நீடித்தது. இதனால் எல்லைப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. இதனையடுத்து அப்பகுதியில் அதிக எண்ணிக்கையிலான வீரர்கள் குவிக்கப்பட்டு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த மாதத்தில் பாகிஸ்தான் இராணும் நடாத்திய முதல் தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## நைஜீரியாவில் ஜனாதிபதித் தேர்தல் திடீரென ஒத்திவைக்கப்பட்டது

(அபுஜா)

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் குட்லக் ஜோனத்தான் தற்போது அதிபராக உள்ளார். அங்கு புதிய அதிபரையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்க எதிர்வரும் 14ஆம் திகதி தேர்தல் நடாத்தப்படும் என தேர்தல்கள் திணைக்களம் அறிவித்திருந்தது.

அதிபர் தேர்தலில் மக்கள் ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய அதிபர் குட்லக் ஜோனத்தானும், அனைத்து முற்போக்கு காங்கிரஸ் (ஏ.பி.சி) சார்பில் முன்னாள் சர்வாதிகாரி முகமது புகாரியும் போட்டியிடுகிறார்கள். தேர்தல் பிரசாரத்தில் இரு கட்சியினரும் மும்முரமாக ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் அதிபர் தேர்தலையும், நாடாளுமன்றத் தேர்தலையும் திடீரென அந்நாட்டு தேர்தல் ஆணையம் ஒத்தி வைத்துள்ளது. 14ஆம் திகதி நடைபெற இருந்த தேர்தல் பாதுகாப்பு காரணங்களுக்காக அடுத்த மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஐ.எஸ்.ஐ.எஸ்.கைப்பற்றிய பகுதியை மீட்டது அமெரிக்க கூட்டுப்படை



(பாக்தாத்)

ஈராக் மற்றும் சிரியாவில் பல பகுதிகளை கைப்பற்றி வைத்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது அமெரிக்க கூட்டுப்படைகள் தாக்குதல் நடாத்தி வருகின்றன. ஜோர்தானின் விமானிலை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிர வாதிகள் கொன்றதையடுத்து ஜோரதானும் தீவிர தாக்குதலை நடாத்தி வருகிறது.

ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளை கட்டுப்படுத்துவது தொடர்பான கூட்டம் ஒன்று ஜேர்மனியில் உள்ள மூனிச் நகரில் நடந்தது. இதில் கலந்து கொண்ட அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன்கெர்ரி கூறியதாவது:

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு வரும் பணத்தை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 60இற்கும் மேற்பட்ட நாடுகள் இதற்கு ஒத்துழைப்புத்தருகின்றன. இதன் மூலம் அவர்களுக்கு பணம் வருவது தடுக்கப்படும். தீவிரவாதிகள் பிடித்து வைத்துள்ள நிலப்பகுதியை மீட்பதற்கு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை கூட்டுப்படைகள் 2 ஆயிரம் முறை விமானத் தாக்குதல் நடாத்தியிருக்கின்றன. ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் இருந்த 700 சதுர கிலோ மீற்றர் நிலம் மீட்கப்பட்டுள்ளது. அதாவது அவர்கள் பிடியில் இருந்த 5இல் 1 பங்கு நிலப்பரப்பு மீட்கப்பட்டு விட்டது.

200 எண்ணெய்க் கிணறுகள் தீவிரவாதிகள் கட்டுப்பாட்டில் உள்ளன. அவற்றையும் செயற்பட விடாமல் செய்யும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் இனி மாற்று முறையில் தங்கள் தாக்குதலை நடாத்த வேண்டிய கட்டாயத்திற்கு நாங்கள் அவர்களை தள்ளி இருக்கிறோம்.

குர்திஸ் மற்றும் ஈராக் படைகள் எல்லாப் பகுதியிலும் முன்னேறி வருகின்றன. கடுமையான போராட்டத்திற்கு பிறகு வெற்றிகள் கிடைத்து வருகின்றன என அவர் கூறினார்.

உலகச் செய்திகள்

# எபோலாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பிரிட்டன் நிதியுதவி வழங்க ஏற்பாடு




(லண்டன்)

ஆபிரிக்காவில் எபோலா நோய் தாக்கியவர்களின் உயிரக்ளைக் காப்பாற்ற பணம் தர முன்வந்துள்ளதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

எபோலா தாக்கிய மேற்கு ஆபிரிக்க நாடுகளுக்கு உதவ ஒரு புதிய IMF நிதிக்கு 50 மில்லியன் டொலர்கள் நிதியளிக்க உள்ளதாக தெரிவித்துள்ளது. மேலும் சர்வதேச நாணய நிதியத்தின் நிவாரண அறக்கட்டளை கடந்த வாரம் வெளியிட்ட தகவலில் கினி, லைபீரியா மற்றும் சியரா லியோன் போன்ற நாடுகளுக்கு அடுத்த இரண்டு ஆண்டுகளில் சர்வதேச நாணய நிதியம் கடன்களை அளிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியின் மூலம் அவர்களின் பொருளாதாரம் மற்றும் சமூகங்களை சரி செய்ய இருக்கிறது. பிரிட்டன் தான் பண வாக்குறுதியளித்த முதல் நாடு என்பது குறிப்பிடத்தக்கது. வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டு மனித சோகம் இழைந்தோடும் கினி, லைபீரியா மற்றும் சியரா லியோனில் நாடுகளின் பொருளாதாரம் அழிவுகரமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் நிதி அமைச்சர் ஜோர்ஜ் ஆஸ்போர்ன் அறிகையில் தெரிவித்துள்ளார்.

# கறுப்பு பண விவகாரம் ஆதாரங்கள் தேவை
## அருண்ஜேட்லி தெரிவிப்பு



கறுப்புப் பண விவகாரத்தில் வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்களின் பெயர்ப்பட்டியல் மட்டும் போதாது, சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் ஆதாரங்கள் தேவை என மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி கூறியுள்ளார்.

மேலும் இது குறித்து பேசிய அருண் ஜேட்லி, எச்.எஸ்.பி.சி. வங்கியில் கணக்கு வைத்தி ருப்பவர்களின் பட்டியல் ஒன்று முக்கிய ஊடகங்கள் வாயிலாக வெளியாகியுள்ளன. இந்தப் பட்டியலில் உள்ளவர்களில் 60 பேரது விபரங்கள் ஏற்கனவே நடைபெற்று வரும் விசாரணையில் இடம் பெற்றுள்ளது. தற்போது வெளியாகியிருக்கும் பட்டியலில் 1,195 இந்தியர்களின் பெயர்கள் உள்ளன. ஆனால், இந்தப் பட்டியல் 2006 - 2007ஆம் ஆண்டில் கணக்கு வைத்திருந்தவர்களின் விபரம்.என்றார்.

# பாரிஸில் திரைப்பட படப்பிடிப்பு பொலிஸார் தடைவிதிப்பு



பாரிஸ் நகர சாலைகளில் அதிரடி சண்டைக்காட்சிகளை படம் பிடிப்பதற்கு பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

இதுகுறித்து பொலிஸ் அதிகாரி சில்வி பெர்னாட் (Sylvie Barnaud) கூறுகையில், பொலிஸ உடைகளில் அல்லது வேறு துறையைச் சேர்ந்த அதிகாரிகளாக நடிகர்கள் சண்டைக் காட்சிகளில் ஈடுபடுவதுபோல் நடிக்கும்போது, அவர்கள் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளாகலாம்.


மேலும் பொது இடங்களில் அதுபோன்ற சண்டைக்காட்சிகளை நடிக்கும்போது, மக்களிடையே குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே படப்பிடிப்புகளின் போது போலி துப்பாக்கிகள் மற்றும் அதிக ஒலி எழுப்பும் பட்டாசு வெடிகள் பயன்படுத்துவதையும் தடை செய்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

பாரிஸ் பத்திரிகை சார்லி ஹெப்டோ தாக்குதலுக்கு பின்னர் எந்த அசம்பாவிதமும் நடைபெறாத வகையில் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வேலணை பாடசாலைக்கு மேலைத்தேய வாத்தியக் கருவிகள்

## உதயன் எம்.பி. வழங்கி வைத்தார்



வேலணை கிழக்கு மகா வித்தியாலயத்திற்கு ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) மேலைத்தேய வாத்தியக் கருவிகளை வழங்கி வைத்தார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தினூடாக ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் நிதியில் குறித்த பாடசாலைக்கான இசைக் கருவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலையின் கடந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டு நிகழ்வில் பாடசாலை சமூகத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இந் நிதி ஒதுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கையளிப்பு நிகழ்வினைத் தொடர்ந்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றுகையில்,

மாணவர்கள் தன்னிறைவான தோர் சூழலில் கல்வி கற்க வேண்டும். பாடசாலைகளில் கல்வி மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகள் அனைத்திற்கும் தேவையான வசதிகள் தத்தமது பாடசாலைகளில் உள்ளன என்ற நிறைவான சிந்தனை மாணவர்களிடையே வளர வேண்டும். இதற்கமைவாக பாடசாலைகளின் வளங்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவத்தார்.

அத்துடன் தீவகத்தின் அனைத்து பாடசாலைகள் மற்றும் முன் பள்ளிகளுக்கு பாண்ட் வாத்தியக் கருவிகள் பெற்றுக் கொடுத்தமைக்காக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### படைமுகாம்களை...

அதனூடாக பிரச்சினைகளைத் தீர்ப்பதாக பிரதமரும், ஜனாதிபதியும் கூறியுள்ளனர். மாற்றம் ஒன்று அவசியம் என வடமாகாண மக்கள் எண்ணுகின்றனர். அதேபோன்று அவர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பு உள்ளது. எனவே அவ்வாறான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நாம் பதில் வழங்குவோம்.

இதேவேளை, திருகோணமலை 22 ஆம் படை முகாமிற்குச் சென்ற பாதுகாப்பு இராஜங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன, இராணுவத்தினரின் தேவைகள் குறித்தும் ஆராய்ந்தார்.

உலகில் எந்தவொரு நாட்டிலும் தேசியப் பாதுகாப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. எனவே தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது பாதுகாப்பு பிரிவின் பொறுப்பாகும். உங்களது சேவைக்கான கௌரவத்தை நாம் வழங்குவோம்.

பாதுகாப்பு பிரிவினரின் கௌரவத்தை பாதுகாப்பதுடன் உங்களை தொழிலை மேம்படுத்தவும் எமது ஒத்துழைப்பை வழங்கு வோம். அதேபோன்று உங்களது திறமைகளை வலுப்படுத்துவது தொடர்பிலும் அவதானம் செலுத்தியுள்ளோம்.

### வடக்கு அதிவேக...

அதன் போது நிதியமைச்சர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், அத்திட்டத்தில் ஈடுபட்டிருந்த ஐந்து ஒப்பந்தக்காரர்களை அழைத்து அது தொடர்பில் கலந்துரையாடினோம்.

அதன் போது நாம் அவர்களை கேட்டோம் முன்னைய அரசாங்கத்தின் கீழ் இத்திட்டத்துக்கென 245 பில்லியன் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் உங்கள் கருத்து என்னவென்று வினவிய போது அவர்கள் தங்களது சேவைக்கு அவ்வளவு நிதித்தொகை தேவையில்லை எனவும் தமக்கு தற்போது ஒதுக்கப்பட்ட நிதியளவு போதுமெனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இது பரம்பரையாக வந்த ஊழல் மிக்க பொருளாதாரமாகும் அத்துடன் முன்னைய ஆட்சியில் இடம்பெற்ற ஊழல் மிக்க நடவடிக்கைகள் குறித்து மேலும் தெரிவித்த அவர், விமானக் கொள்வனவின் போது மிக் விமானக் கொள்வனவு பற்றிக்குறிப்பிடுகையில் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு பேரம் சேப்பட்டது.

அத்துடன் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு கெலிகொப்டரின் பெறுமதி 12 மில் லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான போதும் அவர்கள் 20 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக கணக்கு இருப்பில் காட்டியுள்ளனர்.

அத்துடன் பாதுகாப்பு கல்வி நடவடிக்கைகளுக்காக 22 பில்லியன் செலவிடப்பட்டுள்ளதாகவும் அவற்றுக்கான எந்தவித ரசீது சீட்டுக்களும் இன்றி அவை செலவிடப்பட்டுள்ளன.

காலி முகத்திடலில் உள்ள சங்கிரிலா திட்டம் மற்றும் சி.ஏ.ரி.சி. (CATC) திட்டம் நிலங்களை விற்று பெறப்பட்ட நிதித்தொகை பாதுகாப்பு செயலாளரின் கணக்கிற்கு அனுப்பப்பட்டது.

அத்துடன் திரட்டு நிதியத்திலிருந்து செலவிடப்பட்ட இந்த 7 மில்லியன் தொகையானது திறைசேரியின் அனுமதியோ ரசீதுகளோ இன்றி செலவிடப்பட்ட தொன்றாகும்.

மேலும் ஒரு 2.5 பில்லியன் பணத்தொகையானது கட்டடக் கலை செலவுக்காக செலவிடப்பட்டுள்ளது. அதில் முதல் தவணைப் பணமாக 800 மில்லியன் ஆனால் அதற்குரிய எந்த வித மேற்கோள்களும் காட்டப்படவில்லை.

மேலும் ஒரு தொகை பணமான 30-40 பில் லியன் பணத் தொகை செலவிட்ப்பட்டுள்ளது. ஆனால் அப்பணத் தொகை எவற்றுக்காக பயன்படுத்தப்பட்டது. எங்கு வைப்பிலப்பட்டது தொடர்பிலான எவ்வித விபரங்களும் இல்லை என அமைச்சர் மேலும் தெரிவித்தார்

### வடபகுதிக்கு...

கள் சிலர் இவ் விடயத்தை தங்களது சுயலாப அரசியலுக்குப் பயன்படுத்தி ஆர்ப்பாட்டங்கள் ஊடக அறிக்கைகள் போன்ற கண்துடைப்பு காரியங்களில் மாத்திரம் ஈடுபட்டு முன்னெடுக் கப்பட்டு வந்திருந்த மேற்படி செயற்பாடுகளைத் தடுக்கும் வகையில் செயற்பட்டு வந்தனரே தவிர அம்முயற்சிகளை ஊக்குவிக்கக் கூடிய வகையி லான செயற்பாடுகளில் இறங்கி யிருக்கவில்லை.

மக்களின் நிலங்கள் மக்களுக்கே சொந்தம் என்ற கொள்கை நிலையில் நின்று எமது செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கூட எமது முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாக மேற்படி எஞ்சியுள்ள காணிகள் அதன் உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்னாள் ஜனாதிபதியிடமும் முன்வைத்திருந்தோம். இது அவரது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இடம்பெற்றிருந்தது. நாட்டில் தற்போது புதிய அரசு ஆட்சியில் உள்ள நிலையிலும், புதிய ஜனாதிபதி மற்றும் புதிய பிரதமரிடமும் இக் கோரிக் கையை முன்னுரிமைப் படுத்தி வலியுறுத்தியுள்ளோம்.

எனவே மக்களது நிலம் மக்களுக்கே சொந்தம் என்ற எமது கொள்கை அடிப்படையைத் தொடர்ந்து வலியுறுத்திவரும் நாம் நாட்டில் ஏனைய மாகாணங்களில் தேசியப் பாதுகாப்புக் கருதி இராணுவப் பிரசன்னம் எந்த அடிப்படையில் உள்ளதோ அதே அடிப்படையிலேயே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் இருக்க வேண்டும். இதைவிடுத்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கென விசேட இராணுவத் தேவைகள் இப்போது இல்லை எனத் தெரிவித்தார்.

### ஆர்ப்பாட்டத்துக்கு....

உறவுகளின் கவனீர்ப்பைக் கண்டும் காணாதது போல் அங்கிருந்து நழுவியதையடுத்து அந்த உறவுகள் அவரை வார்த்தைகளால் கொட் டித் தீர்த்தனர்.

காணாமற் போன எமது பிள்ளைகளை வைத்து அரசியலுக்கு வந்தவன் எல்லாம் வாகனத்தில் திரும்பிப் பார்க்காமல் போகிறான், நாங்கள் சாப்பாடு, தண்ணீர் இல்லாது றோட்டு றோட்டாக அலைகிறோம்.

புதிய அரசுக்கு ஆதரவளியுங்கோ என்று சொன்னவர்கள், இது பற்றிப் பேசுவதே இல்லை. இவர்களின் குடும்பம் நல்லாய் இருந்தால் போதும் என அந்த உறவுகள் தமது மனக்குமுறலைத் கொட்டித் தீர்த்தனர்.

இந்த கவனயீர்ப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் மாத்திரமே கலந்து கொண்டிருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதே போல் 30 மாகாண சபை உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டு இருந்தார்கள். அவ்வாறு இருந்தும் இந்த காணாமற் போனவர்களின் உறவுகளுக்கு கை கொடுக்க யாரும் முன்வராது தம்மை ஏமாளிகளாக்குகிறார்கள் என இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தமது மன ஆதங்கத்தை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, காணாமற் போன உறவுகள் யாழ்.வந்த பிரித்தானியப் பிரதமரைச் சந்திக்கவிடாது தடுத்த போது கூட்டமைப்புக்கு எதிராக காணாமற் போனவர்களின் உறவுகள் போர்க்கொடி தூக்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### படையினருக்கு...

வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வலி. வடக்கில் எந்தப் பகுதிகளை எமது நூறு நாள் திட்டத்தினுள் விடுவிக்க முடியும் என்பது தொடர்பில், இராணுவத்தினர் எதிர்வரும் பத்து நாள்களுக்குள் அறிக்கை சமர்ப்பிப்பார்கள். அதன் பின்னர் அந்தக் காணிகள் விடுவிக்கப்படும் என்று மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் டி.எம்.சுவாமி நாதன் தெரிவித்தார்.

### வாழ்வாதார...

பிரதேச செயலகத்தில் தேக்கி வைத்துள்ளனர் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் அமைப்பாளரும், காரைநகர் பிரதேசசபையின் எதிர்க் கட்சித் தலைவருமான வீரமுத்து கண்ணன் (ரஜனி) தெரிவித்தார்.

இதனை அறிந்த தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் மிக வும் அதிருப்தி அடைந்தமையோடு, தன்னிடம் இதுபற்றி மிகுந்த கவலையினையும் தெரிவித்து வருகின்றனர். வாழ் வாதாரத்தின் ஒருபகுதியான கோழிக்கூடு மற்றும் பாத்திரங்கள் தெரிவு செய்யப்பட்ட பய னாளிகளுக்கு 2014ஆம் ஆண்டு 12 ஆம் மாத முற்பகுதியில் வழங்கப்பட்டமை குறிப்பிடப்பட்டதாகும்

ஆனால் ஏனைய பயனாளிகளுக்கான வாழ்வாதாரப் பொருட்களை வழங்காது அதிகாரிகள் மறுத்து வருவது ஏன் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

வாழ்வாதாரத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளை பொருட்களைப் பெற்றுக்கொள்ள இரு தடவைகள் பிரதேச செயலகத்திற்கு அழைக்கப்பட்ட பின்னர் மறுஅறிவித்தல் தருவதாக கூறி திருப்பி அனுப் பட்டனர்

ஆனால் ஜனாதிபதித் தேர்தல் முடிந்து ஒரு மாதமாகியும் அப் பொருட்களை வழங்கப்படாது இருக்கின்றமை வேதனை அளிப்பதாக பயனாளிகள் தெரிவிக்கின்றனர். தங்களது வாழ்வாதார உதவிப் பொருட்களை யாரிடம் முறையிட்டுப் பெற்றுக் கொள்வது என்று தெரியாது மக்கள் சந்தேகம் கலந்த ஏமாற்றத்துடன் கவலையினை தெரி வித்துள்ளனர்.

இந்த ஏமாற்றமானது காரைநகர் வாழ்வாதாரப் யனாளிகளுக்கு மட்டுமா அல்லது ஏனைய பிரதேச பயனாளிகளுக்குமா என்பது மக்களி டையே எழுந்துள்ள கேள்வியாகும்.

இவ் விடயமாக சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் உரிய கவனம் எடுத்து உடனடியாக அப்பொருட்களை வழங்குமாறு சம்மந்தப்பட்டவர்களை கேட்டுக் கொள்கின்றேன் என்றும் காரைநகர் எதிர்க்கட்சித் தலை வர் கண்ணன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக காரைநகர் பிரதேச செயலகத்து டன் தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள முயற்சித்த போதிலும் அதற்கான உரிய விளக்கத்தை அவர்களால் தெரி விக்க முடியவில்லை.

### காணாமற்...

அந்த ஆர்ப்பாட்டத்தின் போது, கணவனைத் தொலைத் தவர்கள் மற்றும் பெற்றோர் காண்மற்போன பிள்ளைகள், பிள்ளைகளைத் தொலைத்த பெற்றோர்கள், இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்கள், இராணுவத்தில் சரணடைந்த பிள்ளைகளின் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு தமது எதிர்ப்பினையும், கண்டணத்தினையும் தெரியப்படுத்தியதுடன், தமது பிள்ளைகளைக் கண்டு பிடித்து தருமாறும் புதிய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

அதன்போது, தமது கைகளில் உறவுகளின் படங்களை ஏந்தியவாறும், எமது உறவுகளைக் கண்டுபிடித்து தருமாறு கோரிய வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன் பின்னர் யாழ். மாவட்டச் செலயகத்தில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் ஊடாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவிற்கு மகஜர் ஒன்றினையும், யாழ். மாவட்ட செயலக கணக்காளர் எஸ். ரகுநாதனிடம் காணாமற் போனோ ரின் உறவினர்கள் கையளித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வட மாகாணத்தினைச் சேர்ந்த 5 மாவட்டத்தில் இருந்தும் காணாமற் போனோரின் உறவினர்கள் 100 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (25)

### குற்றச்சாட்டுக்களை...

க்கள் பயன்படுத்தக் கூடிய ஓர் தொகுதியை விமானத்தை விற்பனை செய்யும் நிறுவனம் இலவசமாக ஏற்படுத்திக் கொடுக்கத் திட்டமிட்டிருந்தது.

இந்த விசேட தொகுதிக்கான செலவு 15 மில்லியன் டொலர்கள் என்ற போதிலும் அதனை இலவசமாகவே குறித்த நிறுவனம் வழங்கவிருந்தது.

இந்த விடயத்தை அரசாங்கத் தரப்பினர் பிழையான வகையில் மக்கள் முன்னெடுத்துச் சென்றுள்ளனர்.

ஜனாதிபதி செயலகம் 100,000 மில்லியன் ரூபா இந்த ஆண்டு செலவிற்காக ஒதுக்கியிருந்தது என்ற குற்றச்சாட்டிலும் உண்மையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# மாவை மீது கேள்விக் கணைகள் முல்லையில் முளைவிடும் அதிருப்தி

(முல்லைத்தீவு)

தமிழரசுக்கட்சிக்கு ஆதவு திரட்ட முல்லைதீவுக்கு அண்மையில் சென்றிருந்த அக்கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா மக்களது கடுமையான எதிர்ப்பின சந்தித்து திரும்பியுள்ளார்.

இலங்கையின் சுதந்திர தினத்தில் கட்சித் தலைமைகளான சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டமை, மைத்திரிக்கு நிபந்தனையற்று ஆதரவு வழங்கியமை மீள்குடிய மர்வு, கைதிகள் விடுதலை உள்ளிட்ட விடயங்களினில் கையாலாகாத நிலை ஆகியவற்றினை பற்றி மக்கள் துருவித் துருவி கேள்வி எழுப்பினர் எனத் தெரிய வருகிறது.

முல்லைதீவில் இரு இடங்களில் கூட்டங்களை நடாத்த மாவை சேனாதிராசா முற்பட்டிருந்தார். எனினும் மக்களது கடும் எதிர்ப்பினையடுத்து ஒரு கூட்டமே நடந்திருந்தது. அதிலும் கடுமையாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பினை விமர்ச்சித்த மக்கள் வெளிநடப்பு செய்துவிடனர் வெறும் ஜம்பதிற்கும் குறைவானவர்களுடன் கூட்டத்தை ஒப்பிற்கு நடத்தியதாக தெரியவருகின்றது.

இலங்கையின் சுதந்திர தினத்தினில் கட்சித் தலைமைகளான இரா சம்பந்தன் மற்றும் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டமை, மைத்திரிபால அரசுக்கு நிபந்தனையற்று ஆதரவு வழங்கியமை தொடர்பில் மக்களிடையே கடுமையான எதிர்ப்பலைகள் கிளர்ந்துள்ள நிலையில் அதனை எதிர்கொள்ளமுடியாத ஒரு சூழலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இதர தலைமைகள் தள்ளப்பட்டுள்ளனர்.

# முல்லை மாவட்ட செயலகத்துக்கு மூன்று மாடிக் கட்டடம் திறப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் உள்நாட்டு அலுவல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சரினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் இன்று திறந்து வைக்கப்படும். இதற்கு 220 மில்லியன் ரூபா செலவில் சகல வசதிகளையும் கொண்ட 3 மாடிகளைக் கொண்ட கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. (40)

# வெளிநாட்டில் பணிபுரிபவர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் விரைவில்

(கொழும்பு)

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இரண்டு வருடங்கள் வெளிநாடுகளில் தொழில்புரிந்துவிட்டு நாடு திரும்பியதன் பின்னர் ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் புதிய திட்டம் தயாரிக்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜி.எஸ்.வித்தானகே கூறியுள்ளார்.

உத்தேச திட்டம் தொடர்பிலான அமைச்சரவை பத்திரமொன்றை விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# யாழ். பிரதேச செயலகத்திற்கு புதிய கட்டடம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலகத்துக்கான கட்டடம் உள்நாட்டலுவல்கள் மற்றும் கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேராவினால் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். பழைய பூங்கா வளாகத்தில் அமைக்கப்பட்ட இப்புதிய கட்டடத்தை அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா மற்றும் மகளிர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வடமாகாண மீன்பிடி அமைச்சர் டெனீஸ்வரன் ஆகியோர் பெயர்ப்பலகையையும் நினைவு படிகத்தையும் திறந்து வைத்ததுடன், நாடாவை வெட்டி கட்டடத்தை திறந்துவைத்தனர்.

தொடர்ந்து இப்புதிய பிரதேச செயலகக் கட்டடத்திலுள்ள கேட்போர் கூடத்தில் திறப்பு விழா நிகழ்வும் இடம்பெற்றது.



இத்திறப்பு விழாவில் 3 கம்பங்கள் நாட்டப்பட்டிருந்தபோதும் தேசியக்கொடி மாத்திரமே ஏற்றப்பட்டது. வடமாகாண கொடியோ, பிரதேச செயலக கொடியோ அங்கு ஏற்றப்படவில்லை.

அதுமட்டுமல்லாமல் சமயத் தலைவர்களின் ஆசி இன்றியே இத்திறப்பு விழா இடம்பெற்றுள்ளது. இங்கு சமயத் தலைவர்களுக்கான ஆசனங்கள் வைக்கப்பட்ட போதிலும் ஒரு சமயத் தலைவரேனும் அங்கு வந்திருக்கவில்லை. (25.இ)

# வெலிக்கடைக்குச் சென்றார் மகிந்த ராஜபக்ஷ

## திஸ்ஸவுடன் சந்திப்பு

(கொழும்பு)



சிறை வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கவை பார்வையிடவென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று வெலிக்கடை சிறைக்குச் சென்றிருந்தார்.

அங்கு திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் சிறையில் உள்ள கடற்படை வீரர் ஒருவரையும் சந்தித்து நலம் விசாரித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

திஸ்ஸ அத்தநாயக்கவை பார்வையிட்டு மகிந்த ராஜபக்ஷ வெளியில் வந்தபோது ஊடகவியலாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர்.

13 ஆம் திகதி இடம்பெறும் கட்சிக் கூட்டத்திற்கு வருகை தருவீர்களா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், தனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்றும் அது குறித்து தனக்கு தெரியாது என்றும் இன்று காலைதான் ஊரில இருந்து வந்ததாகவும் கூறியதோடு, அது என்ன ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டமா என பதில் கேள்வி எழுப்பியபோது விமல் வீரவன்ச குழுவின் கூட்டம் என கூடியிருந்த ஊடகவியலாளர்கள் பதில் அளித்தனர்.

# கைதிகளின் விடுதலை கோரி கொழும்பிலும் நேற்று போராட்டம்

(கொழும்பு)

முன்னிலை சோசலிச கட்சியினர் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நேற்றுக் காலை முதல் மௌனப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனை இன்றி விடுதலை செய்யுமாறும், கடந்த ஆட்சியில் இடம்பெற்ற காணாமலாக்கல்களையும் கடத்தல்களையும் வெளிப்புடுத்துமாறும், குமார் குணரத்தினத்தின் அரசியல் உரிமையை பறிக்காதே என வலியுறுத்தியும் இந்த மௌனப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் பெரும் தொகையானோர் பங்கு கொண்டதுடன் காணாமல் போனவர்கள் கடத்தலுக்கு உள்ளானவர்கள் அரசியல் கைதிகளாக சிறைகளில் உள்ளோரின் குடும்பங்களும் கலந்து கொண்டனர். குறிப்பாக வடக்கு கிழக்கில் இருந்தும் புதிய அரசிடம் தமது உறவுகளை தேடித் தருமாறு கணிசமான மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர் துஷ்பிரயோகம் செய்தால் காத்திருக்கிறது ஆயுள்தண்டனை

## விரைவில் சட்டத்தில் திருத்தம்

சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவர்களுக்கு ஆயுள்தண்டனை வழங்கும் வகையில் சட்டங்களை கடுமையாக்கவுள்ளதாக சிறுவர் விவகார இராஜங்க அமைச்சர் ரோசி சேனாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.



இது தொடர்பில் நீதி அமைச்சர் மற்றும் பிரதி நீதியமைச்சர் ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

சிறுவர்களை முறையாக பராமரித்து அவர்களது உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு பதிலாக இன்று நாட்டில் காணப்படும் நிலைமை கவலையளிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் பிணையில் விடுவிக்கப்படுவதை தடுக்கும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முல்லை செயலகத்திற்கு அமைச்சர் ரிசாத் விஜயம்

வணிகத்துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன் முல்லை மாவட்ட செயலகத்திற்கு நேற்று வருகைதந்து அரச அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நேற்று நண் பகல் வருகைதந்த அமைச்சருடன் வடமாகாண சபை உறுப்பினர் ஜெனோபரும் வருகை தந்தார். தொடர்ந்து அங்கு மக்கள் சந்திப்பு இடம்பெற்றதுடன், இதில் அமைச்சர் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை மீண்டும் திறப்பது, பனை வள கைத்தொழிற்சாலை திறப்பு போன்ற விடயங்கள் குறித்து ஆராய்ந்தார். அத்துடன் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் முல்லை மக்கள் தமக்கு ஆதரவு வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். (67)

# ஜி.ஜி.பொன்னம்பலம் நினைவு தினம் நேற்று

(யாழ்ப்பாணம்)

சட்ட மேதையும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியன் முன்னாள் தலைவருமான ஜி.ஜி. பொன்னம்பலத்தின் 38 ஆவது நினைவு தினம் நேற்று யாழில் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான அப்பாத்துரை விநாயகமூர்த்தியும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரியும் இணைந்து, யாழ். குருநகர் பகுதியில் உள்ள அவரது உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்த அஞ்சலி நிகழ்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர்களான விந்தன் கனகரத்தினம், இ.ஆர்னோல்ட் மற்றும் பரம்சோதி உள்ளிட்ட உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் மாநகர சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (25)


## விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை சம்பளம் 18,000-35,000 வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள் 0766398366. (C3775)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 பெப்ரவரி 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.